விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 31 வெள்ளிக்கிழமை (13.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 177




## பிரபாகரனை கைது செய்வதற்காக முல்லைத்தீவு நோக்கித் தாக்குதல்

### இராணுவத் தளபதி கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு இடங்களுக்குள் ஊடுருவி பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொண்டுவரும் விடுதலைப் புலி உறுப்பினர்களை அவர்கள் மறைந்துள்ள முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து விரட்டியடித்து பிரபாகரனை உயிருடன் கைது செய்வதே வன்னிப் படையெடுப்பின் முக்கிய நோக்கமாகவுள்ளது.

விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனை கைது செய்வதுடன் வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களை அவர்களிடமிருந்து மீட்பதும் எமது (10ஆம் பக்கம் பார்க்க)

## கிராம சேவையாளர் நேர்முகப் பரீட்சை யூன் 23இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1.9.2006ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பரீட்சைத் திணைக்களத்தால் 10.3.2007இல் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 127 பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை யாழ். மாவட்டச் செயலகத்தில் 2008 யூன் 23,24,25 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

இந் நேர்முகப் பரீட்சார்த்திகளுக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் இடம்பெறும் மோதலால் இந்தியாவில் உள்நாட்டுப் பிரச்சினை

## யாழ். நகரப்பகுதியில் இன்று இரவு 9 மணிவரை ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு 512-வது படைப்பிரிவுக்குட்பட்ட யாழ்.நகரப்பகுதியில் இன்று இரவு 9 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும் என இராணுவம் அறிவித்துள்ளது.

நாளை வழமைபோன்று இரவு 7 மணி முதல் அதிகாலை 5 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. நேற்றும் இரவு 9 மணிவரை குறிப்பிட்ட பிரதேசத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## விமான டிக்கட்டின் விலை 15 சத வீதமாக உயர்வு

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விமான டிக்கட்டுக்களின் விலை நூற்றுக்கு 15 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகரித்துச் செல்லும் எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக விமான டிக்கட்டுக்களின் விலையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து பல (10ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் மன்மோகன் சிங் கவலை

(புதுடில்லி)

**இலங்கையில் அதிகரித்திருக்கும் மோதல்கள் இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினைகளை தோற்றுவித்திருப்பதுடன், நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையிலும் சிக்கலை உருவாக்கியிருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.**

**இலங்கையில் மோதல்கள் ஒவ்வொரு முறையும் உக்கிரமடையும்போது இனரீதியான பதற்றம் ஏற்பட்டு தமிழகத்துக்கு வரும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாக அவர் கவலை தெரிவித்தார்.** (10ஆம் பக்கம் பார்க்க)



## காணாமல் போதலை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஐ.நா சபை வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் காணாமல் போதல் சம்பவங்களில் பெண்கள் மற்றும் மனிதநேய பணியாளர்களும் காணாமல் போதலைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் இலங்கையில் 22 பேர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் 18பேர் மே மாதம் காணாமல் போயிருப்பதாக பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு தெரிவித்துள்ளது.

பெண்களும் மனிதநேயப் பணியாளர்களும் இலக்குவைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக செயற்குழு கவனம் செலுத்தியுள்ளது என மனித உரிமை நிபுணர்கள் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை விட மேலும் பல காணாமல் போதல் சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்றுள்ளபோதும், அச்சம் காரணமாக அவை (10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி சென்று புலிகளுடன் பேசுவதற்கு நோர்வேத் தூதுவருக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

வன்னிக்குச் சென்று சமாதான முயற்சிகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நோர்வே அனுசரணையாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பேச்சு மேசைக்கு வரத் தயார் என்று அறிவித்தால் மட்டுமே அமைதி முயற்சிகளுக்கு சாத்தியமுண்டு என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசு சார்பாக கருத்து வெளியிட்டுள்ள அரசின் சமாதான செயலக ஒருங்கிணைப்புத் தலைவர் ரஜீவ விஜயசிங்க மேலும் கூறியுள்ளதாவது,

அமைதி முயற்சிகள் தொடர்பாக வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேசி தனது பணிகளை மேற்கொள்ள அமைதி முயற்சிகளுக்கான சிறப்புத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் எம்மிடம் அனுமதி கோரியிருந்தார்.

ஆனால் அவர் வன்னிக்கு ஏன் போகின்றார்? விடுதலைப் புலிகளுடன் போய் அவர் என்ன பேசப்போகின்றார் போன்ற விடயங்கள் அடங்கிய (10ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனை, வத்தளைப் பகுதிகளில் ஆயுததாரிகளால் தமிழர்கள் மூவர் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை மற்றும் வத்தளைப் பகுதிகளில் தமிழர்கள் மூவர் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டதுடன் மற்றொரு இளைஞன் காணாமல் போயுள்ளார்.

கடத்தப்பட்டவர்களில் ஒருவர் விடுதியொன்றின் முகாமையாளர் ஆவார்.

கொட்டாஞ்சேனை மகா வித்தியாலய மாவத்தையில் அமைந்துள்ள பிரபல விடுதி ஒன்றில் தங்கியிருந்த சுழிபுரத்தைச் சேர்ந்த நடராஜமூர்த்தி கோணேஸ்வரன் என்பவர் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளார்.

வானில் விடுதிக்கு சிவிலுடையில் வந்த ஆயுததாரிகள் இவரை கடத்திச் சென்றுள்ளதாக யாழ். மனித (10ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

தரம்-05 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள் - 04 பகுதி -II

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவர் முகாம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலகம் முகாமைத்துவ மண்டபத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவிருந்த விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் முகாம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாலிச்சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி இன்று 13 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் நாளை 14 ஆம் திகதி காலை 8 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தைச் சிவானந்தா விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (எ-52)

## சர்வதேச குருதிக் கொடையாளர் தினம் - 2008

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டு ஜுன் 14 ஆம் திகதி முதல் சர்வதேச ரீதியில் குருதிக் கொடையாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. தன்னலம் கருதாது பிறர்நலன் கருதி தங்கள் உதிரத்தை உகந்தளிக்கும் உத்தமர்களே குருதிக் கொடையாளர்கள் ஆவார்கள்.

இவர்களின் இந்த உயர்ந்த பணியை மதிப்பளிக்கும் முகமாகக் குருதிக் கொடையாளர் தினம் உலகம் பூராகவும் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

எனவே இத் தினத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து வரும் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களை வாழ்த்துவதுடன் அவர்களின் உயிர் காக்கும் பணி தொடர்ந்து சிறப்புற அமைய இறைவனின் நல்லாசி கிடைத்திட வேண்டுவதுடன் மேலும் இரத்தம் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

ஆகவே இதுவரையில் இந்தப் புனிதப் பணியில் இணைந்து கொள்ளாதவர்களும் தங்களைத் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களாக ஆக்கிக் கொள்ளுமாறு உதிரம் தேவையான உறவுகள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் இரத்ததானத்தின் முக்கியத்துவத்தை அறிந்திராத தங்கள் உறவினர், நண்பர்களுக்கும் இரத்ததானத்தின் முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்தி அவர்களையும் இந்தப் புனிதப் பணியில் இணைத்து வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வைத்திய அதிகாரி,
**இ.சிவசங்கர்,**
இரத்த வங்கி,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## கலைஞர்கள் கௌரவிப்பு

வலி.கிழக்குப் பிரதேச பண்பாட்டு விழாவினை முன்னிட்டுப் பிரதேச கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளதால் வலி.கிழக்குப் பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாட்டுக்கூத்து, இலக்கியம், சினிமா போன்ற பல்வேறு துறைகளிலும் சிறப்புச் சேவையாற்றிய 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களை விண்ணப்பிக்குமாறும் இதற்குரிய விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக ஒப்படைக்குமாறும் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுக் கொள்கின்றார். (ச)

## கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

ஏழாலை மேற்கைச் சேர்ந்த குணரத்தினம் சுஜாதா என்பவரின் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.உரியவர் காரியாலய நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும். (ச)

## காந்தி திரைப்படம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்விசார், கலைத்துவம்சார் படக் காட்சித் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு உலகின் சிறந்த நடிகருக்கான விருதுபெற்ற பென் சிங்ஸ்லியின் நடிப்பிலும் உலகின் சிறந்த நெறியாளருக்கான விருது பெற்ற அன்ரன் பரோவின் இயக்கத்திலும் உருவான காந்தி திரைப்படம் வீடியோக் காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் இப் படம் எட்டு சர்வதேச விருதுகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. திரைப்படக் காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியும் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ச)

## பொது விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர் -08 எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடாதிபதி கலாநிதி க. சிவபாலன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விரிவுரையினை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மகப் பேற்றியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ஏ. சிறிதரன், 'குடும்பத் திட்டமிடலும் சுக வாழ்வும்' எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொதுமக்கள், பல்கலைக்கழகச் சமூகத்தினர் வருகை தந்து பயன்பெற முடியும் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் இரா.சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார். (ச)

## 'இராமநாதம்' நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் இராமநர்தம் நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் செல்வி சங்கவை சிவானந்தம் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாவுக்கு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

நூல் வெளியீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா மேற்கொள்வார்.

இம் முதற்பிரதியை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் க.சிவாஜி பெற்றுக் கொள்வார்.

நயப்புரையை உயர் பட்டப்படிப்புக்கள் பீட வருகை விரிவுரையாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார். (ச)

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தரம் 10,11 ஆசிரியர்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடச் செயலமர்வு எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலுள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் அப் பாட ஆசிரியர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)


நீங்கள் இலங்கை வங்கியில் சேமிப்புக்கணக்கு அல்லது நடைமுறைக்கணக்கு ஒன்றைக் கொண்டுள்ளவரா?
இல்லையெனில் இன்றே கணக்கொன்றை, ஆரம்பியுங்கள்!

விரையுங்கள்

கற்பகதரு மாபெரும் பரிசுச் சீட்டிழுப்பிற்கு
இன்னும் 2 மாதங்கள் மட்டுமே உள்ளன




வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன

நீங்கள் செய்யவேண்டியது, இலங்கை வங்கியில் 2008 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைமுறை அல்லது ஏதோனும் சேமிப்புக் கணக்கொன்றில் கீழ்குறித்த தொகைப் பணத்தை பேணுவதன் மூலம் மில்லியன்கள் பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்.

| கணக்கைப் பேண வேண்டிய காலம் | முதலாவது வெற்றி வாய்ப்புக்கள்<br>1 ஆம் பரிசு<br>3.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் கார்<br>2 ஆம் பரிசு<br>ஒரு மில்லியன் ரூபா பணப் பரிசு<br>3 ஆம் பரிசு<br>ரூ. 750,000/- பணப் பரிசு | இரண்டாவது வெற்றி வாய்ப்புக்கள்<br>1 ஆம் பரிசு<br>2.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் கார்<br>2 ஆம் பரிசு<br>ரூ. 750,000/- பணப் பரிசு<br>3 ஆம் பரிசு<br>ரூ. 500,000/- பணப் பரிசு | மூன்றாவது வெற்றி வாய்ப்புக்கள்<br>1 ஆம் பரிசு<br>1.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் கார்<br>2 ஆம் பரிசு<br>ரூ. 500,000/- பணப் பரிசு<br>3 ஆம் பரிசு<br>ரூ. 250,000/- பணப் பரிசு |
|---|---|---|---|
| 02 மாத காலம் | ரூ. 120,000/- | ரூ. 60,000/- | ரூ. 30,000/- |
| 01 மாத காலம் | ரூ. 240,000/- | ரூ. 120,000/- | ரூ. 60,000/- |

- மேலும் 250 ஆறுதல் பரிசுகளாகிய, தங்கப்பவுண்கள் 50, அரைப்பவுண்கள் 100, மற்றும் ரூ.10,000/- பணப் பரிசுகள் 100, என்பனவும் உள்ளன.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

வயிறுதான் காலைச் சுமக்கிறது; வார்த்தையால் வயிற்றை நிரப்ப முடியாது.

.– அப்துற் – றஹீம்

# வலம்புரி

## உணவுப் பொருள்களுக்கு சகடயோகத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களுக்கு இடையிடையே தட்டுப்பாடு நிலவுவது வழக்கமான விடயமாகி விட்டது.

அதிலும் ஒருமுறை கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் இன்னொரு முறை அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும். இவை இரண்டு பொருள்களுக்கும் மேலாக சீனியும் நான் மட்டும் குறைந்தவனா? என்ற எடுப்பில் சீனியும் தனக்கொரு தட்டுப்பாடான இடத்தைப் பிடித்துக் கொள்ளும்.

இப்படியே பொருள்களுக்கான தட்டுப்பாடு சகடயோகத்தைக் கொண்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கோதுமை மாவுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவியது. இப்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்விதம் மாறிமாறி அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது சாதாரண விடயமாகிவிட்ட நிலையில்,

இப்போது யாழ். குடாநாட்டின் சூழமைவு, இறுக்கமடைந்திருப்பதால் இத்தகைய உணவுப் பொருள் தட்டுப்பாடு மிகப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உணரத் தக்க விடயமாகும்.

குறிப்பாகக் கடந்த சில வாரங்களாக யாழ். குடாநாட்டின் நிலைமை மிகவும் மாற்றமுள்ளதாகக் காணப்படுகின்றது.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், போர்த் தளபாடங்கள் இடம் நகர்த்தப்படும் நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

இவை யாழ். குடாநாட்டின் எதிர்கால அமைதியைக் குலைக்கக் கூடியவை போல் தெரிகின்றது. எனவே யாழ். குடாநாட்டின் எதிர்கால அமைதியைக் குலைக்கக் கூடிய யுத்தம் மேலெழுகை பெறும்போது இயல்பாகவே உணவுப் பொருள்கள் உள்ளிட்ட சகல அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படுவது இயல்பு.

நிலைமை அவ்வாறிருக்கும்போது அரிசிக்கான தட்டுப்பாடு இப்போது காணப்படுமாயின் அதன் பாதிப்பு மேலும் உயர்வடையலாம். எனவே உணவுப் பொருள்கள் உள்ளிட்ட சகல அத்தியாவசியப் பொருள்களையும், களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான ஏற்பாடுகளை உரியவர்கள் செய்தாக வேண்டும்.

அதேநேரம் அதிகாரிகள் எடுக்கும் முயற்சிகளுக்கு யாழ்ப்பாண வர்த்தகப் பிரமுகர்கள் ஒத்துழைப்பு வழங்கி அத்தியாவசியப் பொருள்களைத் தருவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்குக் காட்டும் தாமதம் யாழ். குடாநாட்டு மக்களைப் பட்டினிச் சாவுக்குக் கொண்டு சென்றுவிடும்.

எனவே குடாநாட்டின் எதிர்கால அபாய நிலையைக் கருத்தில் கொண்டு உணவுப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் பணியைச் செய்ய அனைவரும் பாடுபட வேண்டும்.


## அன்னை நாகபூஷணி மூதாட்டியாக வந்து ஆரம்பித்து வைத்த அமுதசுரபி

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கருவறையில் சுயம்பு மூர்த்தமாய் ஊற்றாய் உருவாகி உலகை உய்விக்கின்ற உமையவளாய், சகல உயிர்களுக்கும் அன்னையாய், அரவை பின்னே தாங்கி நயினையில் உறைந்துள்ள இடம் தான் நயினை ஸ்ரீநாகபூஷணிஅம்பாள் ஆலயம். நெடுங்காலமாக பெருந்திருவிழாவில் பெருந்திரளான மக்கள் எந்த வேறுபாடுமின்றி அம்பாளை வழிபட்டுச் செல்வது தொடர்ச்சியான நிகழ்வாகும்.

ஆதிகாலத்தில் பெருந்திருவிழாக் காணவருகின்ற அடியவர்கள் குடும்பம் குடும்பமாகசமையலுக்குவேண்டியபொருள்களுடன் வந்து நயினாதீவில் உள்ள வீடுகளில் தங்கி ஆறுதலாக சமைத்து சாப்பிட்டு அம்பாளின் உற்சவங்களில் கலந்து கொண்டபின் தமது ஊர்களுக்குச் செல்வார்கள்.

எவ்வித ஆயத்தமுமின்றி வருவோர் கடைகளைத்தான் நம்பி வருவர். திருவிழாக்காலங்களில் பல தேனீர் கடைகள் அமைந்திருக்கும். இருந்தாலும் சன நெருசல் மிகுதியாக இருக்கும்.

1959ஆம் ஆண்டில் யாழ். அரசாங்க அதிபராகவும் நயினை அம்பாளின் அறங்காவலர் சபை தலைவராகவும் அமரர் ம. ஸ்ரீகாந்தா இருந்தார். அவ் ஆண்டு நடைபெற்ற தேர்த்திருவிழாவன்று தேர் சுற்றி இருப்புக்கு வந்தபின். ம.ஸ்ரீகாந்தா அவர்கள் யாழ் புறப்பட ஆயத்தமான வேளையில், வெள்ளைச் சேலை அணிந்த மூதாட்டி ஒருவர் அவரை அணுகி நேற்று இரவு வீதியில் உள்ள தேனீர் கடை ஒன்றில் ஒரு தோசை சாப்பிட்டேன். அதற்கு அவர்கள் என்னிடம் பத்து ரூபா வாங்கிவிட்டார்கள் என்று கூறினார். அன்று தோசை ஒன்றின் விலை ஐந்து சதமாகும். உடனே அந்த மூதாட்டியையும் அழைத்துக் கொண்டு தோசை சாப்பிட்ட கடையை காட்டுமாறு ஸ்ரீகாந்தா அவர்களும் மூதாட்டியோடு அக்கடைக்குச் சென்றார். தேனீர் கடையொன்றை சுட்டிக் காட்டி இது தான் என்றாள் மூதாட்டி. அத்தேனீர்க் கடைக்காரர் நயினாதீவை சேர்ந்த கு. கோபாலபிள்ளை என்பவர் அவர் வேலையாட்களை



அழைத்து விசாரித்த பொழுது அங்கு வந்து சாப்பிட வில்லை என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். பின் அந்த மூதாட்டியை கோபாலபிள்ளை தேடியும் அன்று காணமுடிய வில்லை.

மூதாட்டி தனது கடையை சுட்டிக் காட்டிய காரணத்தால் நயினாதீவில் இருந்து யாழ் சென்றதும் யாழ்ப்பாணத் தில் உள்ள நயினாதீவை சேர்ந்த முக் கியஸ்தர்களை அழைத்து அன்னதானப்பணிமேற் கொள்ளுவதற்கான ஆலோசனைக் கூட்டத்தை நடாத்தினார். 1960ஆம் ஆண்டு அன்னதானப்பணியை மேற்கொள்ள உந்து சக்தியாக இருந்தது. அம் மூதாட்டியின் வழிகாட்டல் தான். இச்சம்பவம் பற்றி கோபாலபிள்ளையின் நண்பர் அமரர் சித்தாந்த சரபம் கலாநிதி க. கணபதிப்பிள்ளை B.A மேற் சொன்ன மூதாட்டியின் கதையை அவர் அமரத்துவம் அடைவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் என்னிடம் கூறினார். 'மூதாட்டியாகவந்தவர்வேறுயாரும் இல்லை அம்பாள் தான்' என்றும் அந்த மூதாட்டியை பின் எப்பொழுதும் யாரும் கண்டதில்லை என்றும் கூறினார். 1960ஆம் ஆண்டு நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய அமுத சுரபி அன்னதான சபை அங்குரார்ப்பண கூட்டம் நடை பெற்று தலைவராக சி.க. தம்பையா தெரிவு செய்யப்பட்டார்.

அன்னதானம் 1960ஆம் ஆண்டு தனியார் காணி ஒன்றில் ஓலைக் கொட்டகையில் 7ஆம் திருவிழா வன்று அந்நாளைய அரசாங்க அதிபர் ம. ஸ்ரீகாந்தா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப் பட்ட முதல் நாள் இரவு விஷமிகளால் அன்னதானக் கொட்டகை எரிக்கப்பட்டு அனைத்துப் பொருட்களும் தீக்கிரையானது. பின்னர் சி.க. தம்பையா அவர்களின் தீவிர முயற்சியால் எரிந்த அதே இடத்தில் கொட்டகை அமைத்து மறுநாளே அம்பாளின் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அன்னதானம் விஷமிகளின் செயலால் ஒரு நாள் கூடத் தடைப்படக் கூடாது என்ற

**நயினை -நாகமணி கோபாலகிருஷ்ணன்**

வைராக்கிய உணர்வோடு செயற்பட்ட முன்னாள் தலைவர் அமரர் சி.க. தம்பையா அவர்களின் நெஞ்சுத் திடமான செயற்பாடு தான் இன்றைய இளம் சமூதாயத்தை உள்வாங்கி உலகப் புகழ் பெற்றுநிற்கின்றது. ஆலயத்துள் நாகபூஷணியாகவும் அமுதசுரபி அன்னதானத்தில் அன்ன பூரணியாகவும் எம்பிராட்டி நின்று அருள்பாலிக்கின்றாள். அம்பாளை தினமும் தரிசிக்க வரும் அடியவர்களுக்கு ஆலய வீதியில் தினமும் அன்னம் பாலிக்கின்றாள். மூதாட்டியாய் வந்த எம்பிராட்டி. அனைத்தும் அவள் செயல். சித்தாந்த சரபம் ஸ்ரீலஸ்ரீ கணபதிப் பிள்ளை ஞானப் பிரகாசசிவம்குரு முதல்வர் அவர்களுக்கு நன்றி.

## பாடசாலைகளை மூடிய அரசின் முடிவுக்கு ஆசிரிய சங்கங்கள் கடும் கண்டனம்

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை நீக்க முடியாத அரசாங்கம் எமது தொழிற்சங்கப் போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாது. பாடசாலைகளை மூடிவிடுவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. இதனால் மாணவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்ற வேண்டும் என அவை குற்றம் சாட்டுகின்றன. அவை மேலும் தெரிவித்துள்ளதாவது.

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தலைமையில் கல்வித்துறை சார் சங்கங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இப்பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்தன. எனவே 11ஆம் திகதியும் 12ஆம் திகதியும் தாம் இரண்டு நாள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் தொழிற்சங்கங்கள் அறிவித்திருந்த நிலையிலேயே அரசாங்கம் பாடசாலைகளை இரண்டு நாட்களுக்கு மூடும் தீர்மானத்தை அறிவித்தது. இது தொடர்பாக அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் கல்வி சார் தொழிற் சங்கம் சார்பில் கருத்து தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க கூறியதாவது, எமது தொழிற்சங்க போராட்டத் திற்கு முகம் கொடுக்க முடியாத அரசாங்கம் பாதுகாப்பை காரணம் காட்டி பாடசாலைகளை மூடியதைக் கண்டிக்கின்றோம். 10வருட காலமாக தொடரும் ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை நீக்க முடியாத, அத்தோடு கல்வி அமைச்சின் இடைக்கால தீர்வு யோசனையை செயற்படுத்த முடியாத அரசாங்கம் பிள்ளைகளின் கல்வியுடன் விளையாடுகிறது. அதிபர்கள், ஆசிரியர்களை பாடசாலைக்குசமூகமளிக்க முடியாதநிலையை அரசாங்கமே ஏற்படுத்தியது. (அ)

## வெள்ளி நற்சிந்தனை 24

## பக்தியின் மொழி தமிழ்

அன்பு என்பது ஓர் அருமருந்து உடலுக்கும் உள்ளத்திற்கும் இன்பம் தருவது. ஒருவர் மீது நாம் செலுத்தும் அன்பு உறுதியானதாக இருக்க வேண்டும். அன்புடையார் செயற்பாட்டில் தன்னலம் இருக்காது. பரநலமே செறிந்திருக்கும். அன்பினால் ஆர்வம் உண்டாகும். அது நட்பு என்னும் சிறப்பைத்தருமென வள்ளுவர் கூறியுள்ளார். சிலர் அன்புள்ளவர் போல நடித்துத் தமக்குவேண்டிய சலுகைகளைப் பெற்றுக்கொள்வர். தவறான செயற்பாட்டினைச் செய்து அன்புடையார் போல வாழ்வர். இத்தகையவர் அன்பை உண்மையான அன்பு என மயங்கிவாழ்பவர் இன்று உலகில் பலருள். இவ்வாறு போலியான அன்பின் வயப்பட்டவர் மயக்கத்தால் பல தவறுகளைச் செய்வர்.

இந்நிலையை மாற்றவேண்டுமெனச் சம்பந்தர் எண்ணிச் செயற்பட்டார். இறைவனை அன்போடு வழிபட்டு அவனுடைய இணையடிகளை வழிபடும் அடியாருடைய நிலையை எமக்குக் காட்டுகிறார். போலி அன்புடையாரால் துன்பத்திற்கு ஆளாகுபவரை மீட்க ஒரு வழி சொல்லுகிறார். வயதிலே மிகக் குறைந்த சம்பந்தருடைய உள்ளத்தில் அன்பு பற்றிய தெளிவு ஏற்பட அவர் பெற்ற வாழ்க்கை அனுபவங்களே உதவி செய்தன. பாண்டி நாட்டு மன்னனுடைய மதமாற்றம் நாட்டுமக்களையும் மதம் மாறச் செய்தது. சமண சமயத்தை அவன் சார்வதற்குக் காரணம் சமணர் அவன் மீது காட்டிய போலியான அன்பு தான். மன்னனுடைய மதமாற்றம் தவறானது என அவனுடைய மனைவி மங்கையர்கரசி எடுத்துரைத்தாள். ஆனால் மன்னன் மனைவியின் சொல்லை மதிக்கவில்லை.

மங்கையர்கரசியின் துன்பம் இறைவன் மீது கொண்ட உறுதியான அன்பினால் நீங்குகிறது. பாண்டியமன்னன் வெப்பு நோயால் வேதனைப்படும் வேளையில் சமணர்களுடைய வைத்தியம் கைகொடுக்கவில்லை. சம்பந்தரின் திருநீறுதான் நோயைத் தீர்க்கின்றது. திருவாலவாய் இறைவனின் அருளால் மன்னன் மீண்டும் சைவசமயத்தைச் சார்கிறான். மங்கையர்க்கரசியின் அன்பினையும் நன்கு உணர்ந்து கொள்கிறான்.

இறைவனுடைய இணையடிகளை அன்போடு ஏத்திவழிபாடு செய்கின்றவர்கள் துன்பத்தை அனுபவித்தாலும் அது துன்பம் அன்று. தொண்டு செய்பவரே எனச் சம்பந்தர் கூறியுள்ளார். இறையடியவர்கள் துன்பத்தை அனுபவிக்கும் போது அதனை மற்றவர் தவறாக விளங்கக் கூடும். பிறருடைய நலன்கருதித் தொண்டு செய்பவரே உண்மையான அன்புடையவராவார். மனத்திலே அன்புடைய அடியார்கள்வரும்துன்பத்தை எல்லாம்பொறுத்திருப்பர். இறைவன் மீது அசையாத நம்பிக்கை கொண்டு தம் கடமைகளைச் செய்வர் அத்தகைய அன்பு மனமுடைய தொண்டரையே சம்பந்தர் பாடல் இனங்காட்டுகிறது.

"அன்புறு சிந்தையராகியடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவி நின்
றின்புறு மெந்தையிணையடி யேத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே"

## மஹோற்சவம்

அச்சுவேலி - தோப்பு அருள்மிகு போதி ராம்பிட்டிபோதி பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும், மாலை சப்பறமும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (6)

## அலங்கார உற்சவம்

உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ் உற்சவத்தில் 21 ஆம் திகதி சனிக்கிழமை 8 மணிக்கு 108 சங்காபிஷேகமும், 10 மணிக்கு தீர்த்தமும் இடம்பெறும். (அ)

♦♦♦

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு திருவருள்மிகு குருநாதசுவாமி கோவில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறவுள்ளது. (இ)

## மாவட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டிகள்

(அல்வாய்)

தமிழ்த்தினப் போட்டியில் வலய நிலையில் முதலாம் இடம்பெற்ற மாணவர்களுக்கான மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிவிபரங்கள் வருமாறு,

20ஆம் திகதி வெள்ளி எழுத்தாக்கம், 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை - நாட்டுக்கூத்து, 28ஆம் திகதி சனிக்கிழமை - எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய தனி நிகழ் வுகள் அனைத்தும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குழு நிகழ்வுகள் அனைத்தும் (இ-19)

## கோப்பாய் கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்த்தினப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் வெள்ளி காலை 9 மணிக்கு எழுத்தாக்கமும் சனி காலை 9 மணிக்கு ஏனைய போட்டிகள் அனைத்தும் இடம்பெறவுள்ளதாக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (இ)

## கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

ஏழாலை மேற்கைச் சேர்ந்த குணரத்தினம் சுஜாதா என்பவரின் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் காரியாலய நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும். (இ)

## வினாடி வினாப் போட்டி

(அல்வாய்)

மாகாண மட்ட விஞ்ஞான, கணித வினாடி வினாப் போட்டி - 2008, ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதால், பாடசாலை மட்டத்தில் தரம் 6முதல் தரம் 11 வரை ஒவ்வொரு தரங்களிலும், ஆங்கில மொழி, தமிழ்மொழி பிரிவுகளிலும் வேறு வேறாக போட்டிகள் நடாத்தி, ஒரு தரத்தில் 50க்கு குறைவான மாணவர்கள் இருந்தால் 1 மாணவரும், 50க்கும் 100க்கும் இடையில் இருந்தால் 2 மாணவரும், 100க்கு மேல் இருந்தால் 3மாணவரும் என்ற வீதத்தில் பெயர் அட்டவணைகளைத் தயாரித்து வலயக் கல்வி அலுவலக, கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறும், வலயமட்டப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (இ-19)

# நட்டஈடு பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அரச ஈட்டு முதலீட்டு வங்கிமூலம் கடன்

(காரைநகர்)

பயங்கரவாத வன்செயல் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் வன்செயல் காரணமாக பாதிப்படைந்த வீடு மற்றும் கட்டடம் ஆகியவற்றிற்கு நிவாரணம் வழங்க மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அமைச்சின் REP/SMIP/H/2008/01 இலக்க சுற்றறிக்கைக்கு அமைய 1983 யூலை மாதம் 24 ஆம் திகதியிலிருந்து இதுவரை அடிக்கடி இடம்பெற்ற பயங்கரவாத வன்செயல், இனக் கலவரம், சிவில் கிளர்ச்சி நிலை மற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்பு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் பாதிப்படைந்த வீடு மற்றும் கட்டடங்களுக்காகவும் மற்றும் 1977 ஆம் ஆண்டின் பின்பு இடம்பெற்ற தேர்தல் வன்செயல் காரணமாக பாதிப்படைந்த வீடுகளுக்காகவும் நிவாரணம் வழங்கும் பொருட்டு ஏற்கனவே உரிய பாதிப்புக்காக அரசினால் நட்ட ஈடு பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அரச ஈட்டு முதலீட்டு வங்கி மூலம் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த புனர்வாழ்வு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனவே காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இத்தகைய பாதிப்பிற்குள்ளாகி ஏற்கனவே நட்டஈடு பெறாதவர்கள் அவ்வப் பகுதி கிராம சேவையாளரிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தைப் பெற்று கிராமசேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்குமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# சிறுவர் உழைப்புக்கெதிரான விழிப்புணர்வு - மாவட்ட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உழைப்புக்கெதிரான விழிப்புணர்வு தொடர்பான மாவட்ட மட்ட நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து ஆரம்பமாகும் சிறுவர் உழைப்புக்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊர்திகள் காலை 9 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலடியை வந்தடையும், அங்கிருந்து ஊர்வலமாக வீரசிங்கம் மண்டபத்தை 10 மணிக்கு சென்றடையும்.

விழிப்புணர்வு தொடர்பான நிகழ்ச்சிகள் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தலைமையுரையை "சேவ் த சில்றன்" மாவட்ட முகாமையாளர் விக்டர் மோசேஸ் நிகழ்த்துவார். 10.25 மணிக்கு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஆவண விபரணச் சித்திரம் காண்பிக்கப்படும். தொடர்ந்து விசேட உரையை யாழ். மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் கே. கனகேஸ்வரனும் நன்றியுரையை சிறுவர் உரை இணைப்பாளர் திருமதி யோகேஸ்வரி சுரேஸ்குமாரும் நிகழ்த்துவுள்ளனர். (அ-6)

# தமிழ் மொழித்தின வலய நிலைப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான வலய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் பங்குபற்றத் தகுதியானவர்களாவர்.

இப் போட்டியாளர்களை அவ்வப் பாடசாலைப் பொறுப்பாசிரியர்கள் போட்டி நடைபெறும் இடங்களுக்கு 8.30 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்கும் படியும், மேடை நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள உள்ளோர் (அதாவது இசை, நடனம், வில், நாடகம், கூத்து ஆகியன) காலை 9 மணிக்கு மேடையேற்றக் கூடிய நிலையில் ஒப்பனையுடன் தயார் நிலையில் வைத்திருக்கும் படியும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

போட்டி விபரங்கள் வருமாறு,

14ஆம் திகதி சனிக்கிழமை,

♦ வட இந்து மகளிர் கல்லூரியில் எழுத்தாக்க நிகழ்வுகள் யாவும், வாசிப்பு பிரிவு 1,2 கதைகூறல்(ஆக்கத்திறன்)

♦ வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இசை தனி நிகழ்வுகள் இசையும் அசைவும், இசை 2-5 பிரிவுகள் நடனம் தனி 1-5 பிரிவுகள்

♦ தும்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை பேச்சு பிரிவு 1-5, பாஓதல் பிரிவு 1-5

15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை.

♦ வட இந்து மகளிர் கல்லூரியில் நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம் ஆகியவற்றின் திறந்த போட்டிகள்.

♦ வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இசை குழு I, II, நடனம் குழு I, II

18ஆம் திகதி புதன்கிழமை

♦ வட இந்து மகளிர் கல்லூரி நாட்டுக்கூத்து - சகல வகைகளும், தமிழறிவு வினா விடை - திறந்த போட்டி. (இ-19)

## வளர்ப்பு நாய்களுக்கான (A.R.V) விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு (A.R.V) விலங்கு விசர்நோய் தடுப்பூசி எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை றக்கா வீதியிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்பாகவும் பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணிவரை இராசாவின் தோட்டம் கோவில் ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (அ-6)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் "ஆ" என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் பொன். சுகந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (இ-35)

♦♦♦

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10மணி பூசை முடிவுற்றதும் "இராமாயணத்தில் ஓர் கண்ணோட்டம்" என்னும் பொருள் பற்றி திருமதி க.ஜெகவதனராசா ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (இ-35)

## எழுத்தாக்கம் தொடர்பான திருத்தப் பணிகள்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட வலய மட்டப் போட்டி, எழுத்தாக்கப் போட்டிகளின் திருத்தப் பணிகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் முற்பகல் 10 மணி முதல் பி.ப.3 மணிவரை வட இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதால், வடமராட்சி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளிலும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் கோட்ட, வலய மட்ட எழுத்தாக்கத் திருத்தப் பணிகளில் ஈடுபட ஆவன செய்யுமாறு பாடசாலை அதிபர்களை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-19)

## யாழ்.செய்திகள்

## பவள விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டம், "ஞானம்" சஞ்சிகையின் அனுசரணையுடன் நடாத்தும் சிறிபி. சிவசரவணபவனின் பவளவிழா, 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியில் யாழ். இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியான் க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை ஓய்வுபெற்ற உதவித் தபால் அதிபர் ஆ.கே.கணேசவேல் ஜே.பியும், ஆசியுரையை மயிலணை சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்களும், வாழ்த்துரையை உடுவில் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் ஜே.பி.யும், தொடக்கவுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனும் பாராட்டுக்களை கலாநிதி திருமதி ம.சண்முகதாஸ், கோப்பாய் சிவம், கலாபூஷணம் கவிஞர் சு.துரைசிங்கம், ஐ.சாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

"ஞானம்" பவளவிழா மலரை ஞானம் ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரனும், "நினைவுகள் மடிவதில்லை" சிறிபி சிவசரவணபவனின் சிறுகதைத் தொகுதியை பேராசிரியர் அ.சண்முகதாசும் வெளியிட்டு வைப்பர். (அ)




நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் சமூக சேவை அர்ப்பணிப்பு நிதிக்காக "யுனிற் கணனி நிறுவனத்தின்" அனுசரணையோடு நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வு அண்மையில் கழக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.றோட்டறக்ட் கழகத் தலைவர் Rtn.கே.பாலசுப்ரமணியம் உரையாற்றுவதையும், கழக உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்களுடன் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

# விலைவாசி உயர்வினை கண்டித்து ஜே.வி.பி.மகளிர் அணி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

விலைவாசி உயர்வினைக் கண்டித்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஜே. வி. பி.யின் மகளிர் அணியினர் கண்டன ஆர்ப்பாட்ட மொன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவான பெண்கள் கலந்து கொண்டு அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறும் தொழிலாளர்களின் வேதனங்களை அதிகரிக்கும் படியும் கோஷ மெழுப்பினர்.

வயிற்றில் அடிக்காதே, மக்களை பிச்சைக்காரர்களாக்கும் மஹிந்த அரசே உடனடியாக ஆட்சியை விட்டு வெளியேறு; மக்களை பட்டினி போட்டு வாட்டி வதைக்கும் அராஜக அரசே உடனடியாக ஆட்சி துற போன்ற கோஷங்களையும் ஆர்ப்பாட்டக் காரர்கள் எழுப்பினர். அத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்களும், ஆட்சியாளருக்கு சொகுசு மக்களுக்கோ வறுமை! பால்மா, அரிசி, எண்ணெய் விலையை உடனடியாக குறை, மக்களை வதைக்காமல் அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறை, பொய், ஏமாற்றம் வேண்டாம், மக்களுக்கு நிவாரணம் வழங்கு, மக்களே, யுத்தத்தை காரணம் காட்டி மக்களுக்கு குழி பறிக்கும் அரசுக்கு எதிராக அணி திரள்வோம் ஆகியபதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆர்ப் பாட்டத்தின்போது, மக்கள் விடுதலை முன்னணியின் சோஷலிச மகளிர் சங்கத்தின் மேல் மாகாண ஒருங்கிணைப்பாளர் பிரியங்கா கொத்தலாவல கருத்து தெரிவிக்கையில்,

உலகில் எந்தவொரு நாட்டலும் இல்லாத வகையில் இலங்கையில் தான் கண்மூடி கண் திறப்பதற்குள் பொருட்களின் விலை, அதுவும் அத்தியாவசிய் பொருட்களின் விலை கிடுகிடுவென அதிகரித்த வண்ணம் உள்ளன. ஏழை மக்களின் வாக்குகளைப்பெற்று ஆட்சி பீடமேறிய மஹிந்த அரசு, அதே மக்களை பட்டினியின் விளிம்புக்கு இட்டுச்செல்கின்றது. போகிறபோக்கை பார்த்தால் இன்னும் ஓரிரு வருடங்களில் இலங்கை சோமாலியா, எதியோப்பியா ஆகிய நாடுகளின் பட்டியலில் போய் சேர்ந்துவிடும்.

எனவே தான் உடனடியாகவே அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்கும்படியும், பஸ், ரயில் கட்டணங்களை குறைக்கும் படியும் அரசுக்கு அழுத்தம் கொடுக்குமுகமாக இந்த கண்டன ஆர்ப் பாட்டத்தை நடத்த நாம் தீர்மானித்தோம் என்றார். (அ)

# கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் தாமதம் மடுமாதா ஆடித்திருவிழா நடைபெறாது

(கொழும்பு)

கத்தோலிக்க மக்களின் புனித தலமாக விளங்கும் மடு மாதா தேவாலயத்தின் ஆடி மாதத் திருவிழா இம்முறை நடைபெற மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. மடு மாதா ஆலயப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதி வெடிகள் அகற்றப்படாததே இதற்கு முக்கிய காரணமாகும். மடுப்பகுதியில் இடம்பெற்ற கடும் மோதல் களையடுத்து ஆலயப்பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்களால் அங்கிருந்த குருமாரும் , அருட் சகோதரிகளும் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றிருந்தனர். அத்துடன் மடு மாதாவின் திருச்சொரூபத்தையும் எப்ரல் மாதம் 3 ஆம் திகதி தேவன் பிட்டி புனித சவேரியார் ஆலயத்துக்குக் கொண்டு சென்றனர்.

மடுத் தேவாலயப்பகுதியில் தற்போது இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளதால் அப்பகுதியில் உள்ள கண்ணிவெடிகள், மிதி வெடிகளை அகற்றித் தருவதாகவும், அதற்கு சில மாதங்கள் எடுக்கும் எனவும்படைத்தரப்பினரால் மன்னார் ஆரியடமும், மன்னார் குரு முதல்வரிடமும் தெரிவிக்கப்பட்டிருந் தது.

எனவே, கண்ணிவெடிகள், மிதி வெடிகள் அகற்றப்படும் மடுவை அமைதி வலயமாக பேணப்பட்டாலுமே மீண்டும் ஆலயத் திருவிழாக்களை நடத்த முடியும் எனவும் கத்தோலிக்க திருச்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதனால் எதிர்வரும் ஜுலை 2ஆம் திகதி மடுத்திருவிழாவை நடத்த முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், எதிர்வரும் ஆகஸ்ட் 15ஆம் திகதி விண்ணேற்பு திருவிழா நடைபெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

மடுமாதா ஆலயத்தில் வருடத்தில் ஜுலை 2, ஆகஸ்ட் 15 ஆகிய இரு திருவிழாக்கள் நடைபெற்று வருகிறது.

இவ்விரு திருவிழாக்களும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெரும் தொகையான யாத்திரிகள் சென்று வருவது வழமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)


# இலங்கை மனித உரிமை நிலைகுறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆழந்த கவலை

## நிலைமை சீரடையாவிடின் நிதியுதவிகள் தடைப்படும் என எச்சரிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய நட்புறவுகள் உண்டு எனினும் ஆட்கடத்தல், காணாமல் போதல் தொடர்பில் இலங்கை அக்கறை காட்டுவதில்லை என்ற குற்றச் சாட்டு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் மிகுந்த் கவனம் செலுத்தியுள்ளது. மனித உரிமைகள் விடயத்தில் அரசாங்கம் அதீத கவனத்தை செலுத்த வேண்டும் என்று ஐரேப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவித்த போது ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக்கான பிரதி செயலாளர் நாயக்கம் ஜஹோ அக்கியூர் மக்கபோ மேற்கண்டவாறு கூறினார். அங்கு ஐரோப்பிய ஒன்றி



12.06 .2008 வலம்புரியில் வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை "வெள்ளைக்கரிசலாங்கண்ணி" என்ற செய்திக்குரிய சரியான படம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.

யத்திற்கும் இலங்கைக்கும் இடையில் ஆழமான நட்புறவுகள் பேணப்பட்டு வருகின்றன. அவற்றில் பொருளாதாரம், வர்த்தகம், அர சியல் மற்றும் கலாசாரம் ஆகிய வற்றை பாதுகாத்தல் தொடர்பிலான உறவுகள் வலுவானவை . இதற்கான சந்தர்ப்பத்தை நீடிப்பது தொடர்பில் இந்த விஜயத்தின் போது அரசாங்க தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டது.

ஜி.எஸ்.பி.பிளஸ் தீர்வைச் சலுகையைப் பெறுவதற்கு இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு உரிமை இருக்கின்றது என்பதனால் அதுகுறித்து விண்ணப்பிக்க முடியும் எனினும் அதற்கான தகைமைகள் தொடர்பில் அரசாங்க பிரதிநி திகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.


அது மட்டுமல்லாது சர்வதேச செஞ்சிலுவைசங்க பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவன பிரதிநிதிகள் வன்னிக்கு செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள் ளது. இது மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதை தடுப்பதற்கான செயற்பாடாகும் என்று சுட்டிக் காட்டியுள்ளோம். கடந்த முறை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் நோர்வே பிரதிநிதியை கிளிநொச்சிக்கு அனுப்புவதற்கான அனுமதியை அரசாங்கத்திடம் கோரியிருந்தனர் அந்த நிலைப்பாட்டிலேயே ஐரோப்பியஒன்றியம்இன்னமும்இருக்கின்றது.

இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் குறித்து நாம் எமது ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம். சர்வதேச மாண்பு மிக்கோர் குழு அண்மையில் இலங்கை யிலிருந்து வெளியேறுவதற்கு தீர்மானித்துள்ளது. மனித உரிமைகள் குறித்த அவர்களின் விதப்புரைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறும் சுயாதீன மனித உரிமைகள் கண்காணிப்பிற்கு வழி வகுக்குமாறு நாம் கோருகின்றோம்.

எமது அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான உதவிகள் குறித்தும் ஆராயப்பட்டது. எமது உதவிக ளுக்கு அரசாங்கம் வரவேற்றுள்ளது. எனினும் இந்த உதவிகளை தொடர்வதில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம் .குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஐ.நா. மற்றும் தொண்டுநிறுவனங்களுக்கான விசாக்களை தடை செய்வதை நீக்க வேண்டும். அவசிய தேவைகளின் பொருட்டு வன்னிக்கு முகவர் நிறுவனங்கள் செல்வதற்கு வழி வகுக்க வேண்டும். மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளும் தொண்டு நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வரிகள் நிறுத்தப்படல் வேண்டும்.

இவ்வாறான விவகாரங்களை தீர்க்கத்தவறும் பட்சத்தில் இலங்கைக்கான நிதியுதவிகளை வழங்குவது மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான நிதியுதவிகளை வழங்குவது என்பன சாத்தியமற்றுப் போகும் என்பதையும் நாம் எடுத்துக் கூறியுள்ளோம் என்றார். (அ)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### பத்தாம் திருவிழா

### ஓடிவாம்மா பூஷணி

அலைகடல் சூழ அமர்ந்தவளே – அம்மா
அன்றாடம் அல்லலுறும் உன்
அடியவர்களின் துயர் துடைக்க
அடிக்கமலம் எடுத்து ஓடிவாம்மா – பூஷணி

*இ.பிரதாயினி –நல்லூர்*

### குறைதீர்க்கும் தாயே...

உன்னை வணங்காத
உயிர்கள் இல்லையம்மா
அவர்கள் மனதில்
நீ ஆனந்த ஜோதியம்மா
என்றும் உன்னைதொழ
உன் ஆலயம் நாடும்
பக்தர்கள் கோடியம்மா
அவர்கள் குறைகள் களைவது
உன் கருணையம்மா.

*சிவா. ராகினி –இணுவில்.*

### தருவாயே மனதினில் களிப்பினையே

எழில் மிகு நயினையில்
எழுந்தருளியிருக்கும்
எங்கள் தேவியே.....
பொழில் சூழும் ஆழியில்
பொலிவுடன் வலம் வரும்
உன் காட்சி தன்னையே.....
மகிழ்வுடன் நாம் கண்டு
மகிழ்ந்திடவே .....
தவிலுடன் வீதி வலம்
வந்து தருவாயே.....
மனதினில் தாங்காத
களிப்பினையே....

*ப.நாகேஸ்வரா–சண்டிலிப்பாய்*

### கண்மணியே மஞ்சத்துள் வாரீர் அம்மா

மூலமுறு பழம் பொருளின் முதலே சக்தி
முகிழ்த் தெழுந்த உற்பவத்தின் முடிவே உன்னை
ஞாலமுறு உயிர்வகைகள் அண்டகோடி
நாடிவர நயினையிலே கோயில் கொண்டு சீலமுறு
தெய்வீகக் காட்சி நல்கி(த்)
திசை மிசை கொண்டு அடியார்கள் சிரமேற்கூப்ப (க்)
காலமெல்லாம் நின் கருணை காட்டி நின்றாய்
கண்மணியே மஞ்சத்தில் வாரீர் அம்மா

*நயினைக்கவிஞர் நா.க. சண்முகநாதபிள்ளை*

### எங்கள் மனக்குறை தீரம்மா!

அம்மா நாகபூஷணி மணிபல்லவ நாயகி
செம்பவள மேனியளே நாகசர்ப்பம் அணிந்தவளே
நின்மதியில்லையம்மா இத் தரணியிலே – மனம்
வெம்புகிறோம் அலைகடல் நயினைப் பதியாளே
உம்மை நாடி வரும் எங்கள் மனக்குறை தீரம்மா!

*ப.சிவசங்கரன் –கோண்டாவில் வடக்கு*



நயினை நாகபூசணி
அன்னையின் அருளால்
நாட்டில் அனைவருக்கும்
நிம்மதியான வாழ்வு கிடைக்க
வணங்குகின்றோம்

S.V.முருகேசு
இல.154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
T.P No: 222 2911
222 2202

(C-1200)

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 4

பகுதி -II
நேரம் - 1 மணி 15 நிமிடம்

வே.அன்பழகன்
யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை

**01) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்**

அது ஓர் அடர்ந்த காடு. அந்தக் காட்டிலே பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டின் நடுவில் ஒரு பெரிய குளம் இருந்தது. அக்குளத்தில் செந்தாமரைகள் மலர்ந்திருந்தமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அவற்றைப் பார்ப்பதற்கு நாள் தவறாது வருவது போல் சூரியன் உதிப்பான். சூரியனின் பொற்கதிர்களைக் கண்டதும் செந்தாமரைப் பூக்கள் பூத்துக் காட்சியளிக்கும்.

1) மிருகங்கள் எங்கே வாழ்ந்து வந்தன?
..................................................
2) கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்பட்டவை எவை?
..................................................
3) சூரியனைக் கண்ட தாமரை மலர்கள் என்ன செய்யும்?
..................................................
4) இந்த உரைப்பகுதியில் வர்ணிக்கப்பட்ட காட்சி எந்த நேரத்தைக் குறிக்கிறது?
..................................................
5) பந்தியிலுள்ள கீழே தரப்பட்ட வசனத்தில் காணப்படும் அடைமொழியின் கீழ்க்கீறிடுக
அந்தக் காட்டின் நடுவில் ஒரு பெரிய குளம் இருந்தது

02) 1) வேறுபட்ட சொல்லின் கீழ்க் கீறிடுக உடல், தோல், சரீரம், மேனி, யாக்கை
2) பிழை திருத்தி எழுதுக நோயாலி மறுந்து குடித்தார்.
..................................................
3) சேர்த்தெழுதுக ஆடு + குட்டி = ..............................
4) படத்திற்குப் பொருத்தமான சொல்லை வைத்து வசனத்தைத் திருப்பி எழுதுக.
நான் மரத்தில்  பறிக்கும் போது  குஞ்சு ஒன்றைக் கண்டேன்.

**03) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வெள்ளை உள்ளம் உனக்கு மட்டும்
தந்தது யாரு? அதை
எல்லாருமாய் பங்கு கொள்ளும்
வழியினைக் கூறு

இரவைப் பகலாய் ஆக்கி நீயும்
இன்பம் தருகிறாய் - உலகில்
ஏற்றத்தாழ்வு பாராமலே
ஒளியைத் தருகிறாய்

1.இப்பாடல் எதனைப் பற்றி விபரிக்கின்றது?
..................................................
2.பாடலில் உள்ள பெயரடை மொழி ஒன்று எழுதுக?
..................................................
3. நிகழ்கால வினைச்சொல் எழுதுக
..................................................
4. இரவைப் பகலாய் மாற்றியது எது?
..................................................
5.உயர்திணை முன்னிலை ஒருமைப் பெயர் எது?
..................................................
6.பாடலில் உள்ள இணைமொழி யாது?
..................................................
7.ஒளி என்பதன் ஒத்தபதம் யாது?
..................................................
8.இன்பம் என்பதன் எதிர்ப்பதம் யாது?
..................................................
9.உனக்கு என்பதன் பன்மை வடிவம் யாது?
..................................................
10.வெள்ளை உள்ளம் என்பதன் கருத்து யாது?
..................................................


**04) ஒழுங்குபடுத்தி எழுதுக.**
1.மற்றைய / விட / அதிகமான / பெற்றவை / குரங்குகள் / பிராணிகளை / வளர்ச்சி /மூளை
..................................................
2. பூந்தோட்டத்தில் / முல்லை / பூத்த / மணம் / கலந்து / மலர்களின் / காற்றோடு / பரவியது
..................................................



**05) நிறுத்தற் குறிகளை இடுக்.**
1.அன்புள்ள பூனையாரே
2.சிவப்பு நீலம் பச்சை மஞ்சள் போன்ற பல பலூன்கள் உள்ளன

**06) ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**
1) Let us sing a song. ..............................
2) Please stop there. ..............................
3) Pleasego out..............................
4) January..............................

**07) தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலக் கருத்தை எழுதுக.**
1) வீடு........... 2) வைத்தியசாலை............. 3) பாடசாலை ...............

**08) சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.**
1) மழகே வயச தஹயய்..............................
2) கிரி சுது பா(ட்)டாய் ..............................

**09) கீழே தரப்பட்ட உருக்கள் காணப்படும் காசுத் தாள்களின் பட்ங்கள் எவையெனப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**
1)  2)  3)  4) 
............... ............... ............... ...............

**10) பின்வருவனவற்றின் பெயர்களை எழுதுக**
1)  ...............
2)  ...............


**11) சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**
01.சிலந்திக்கு எத்தனை கால்கள் உள்ளன? (1) நான்கு (2)ஆறு (3)எட்டு (4)பத்து
02.பறக்க மாட்டாத பறவை எது? (1)கோழி (2)காகம் (3)குயில் (4)பென்குயின்
03.குட்டியீன்று பால் ஊட்டுவது எது? (1) மான் (2) கோழி(3)தும்பி (4)பாம்பு
04.வலுவான ஓடுடைய ஒரு பிராணி எது? (1) பேன (2) நண்டு (3)பல்லி (4)ஓணான்
05.மீன் நீந்துவதற்கு உதவும் பிரதான உறுப்பு (1) வாய் (2) பூ (3)செட்டை(4)வால்


**12) பின்வரும் பாடல் வரிகளில் வீடுபட்ட இடங்களை நிரப்புக.**


அன்பை வளர்க்க வேண்டும் - கிளியே
.............................. பெருக்க வேண்டும்



உன் போற் ............ எண்ணி - நல்ல
............... புரிய வேண்டும்.

**13) பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.**
6)  2) 
............... ...............

**14) சரியான விடைகளை எழுதுக.**
01.ஒரு கட்டடத்தின் திட்டப்படம் பின்வரும் உருவில் காண்ப்படுகின்றது.


இங்கு காட்ட்ப்பட்டுள்ள அளவிடைக்கு ஏற்ப அறை B யின் நீளம் யாது? (...............)
02. 1.l 200 mlநீரை வெளியேற்றுவதற்கு 150 ml கொள்ளும் கோப்பையினால் எத்தனை தடவைகள் நீர் எடுத்து வெளியேற்ற வேண்டும்?(...............)
03. 

இவ்வுருவின் சுற்றளவைக் காணுங்கள்(...............)
04.கடிகாரம் A யின் முகத்தில் காணப்படும் நேரத்தைக் கடிகாரம் B யின் முகத்தில் காட்டுவதற்கு,அதில் மணித்தியால முள்ளையும் நிமிட முள்ளையும் வரைக.


05  இரு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் 1cm ஆகும். தரப்பட்ட உருவின் பரப்பளவு யாது?
06.84 cm நீளமுள்ள வெள்ளிச் சங்கிலி ஒன்றில் இருந்து 47 cm 9mm நீளமுள்ள பகுதியொன்று வெட்டி நீக்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் துண்டின் நீளத்தைக்காணுங்கள். (...............)
07.புத்தகக் கண்காட்சி ஒன்றைப் பார்ப்பதற்கு முதலாம் நாள் 754 பார்வையாளர்களும் இரண்டாம் நாள். 1295 பார்வையாளர்களும் மூன்றாம் நாள் 2920 பார்வையாளர்களும் வருகை தந்தனர். மூன்று நாட்களிலும் வருகை தந்தோரின் மொத்த எண்ணிக்கை யாது? (...............)
08. ஒரு பாத்திரத்தை நிரப்புவதற்கு 5 l 540 ml கனவளவுள்ள நீர் தேவைப்படுகின்றது. அத்தகைய 4 பாத்திரங்களை நிரப்பத் தேவையான நீரின் கனவளவு யாது? (...............)
09.காட்டப்பட்டுள்ள தளவடிவங்கள் யாவற்றையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க திண்ம முப்பரிமாணப் பொருளின் பெயரை எழுதுக. (...............)

10.சில நகரங்களுக்கு இடையில் உள்ள தூரங்கள் கிலோமீற்றரில் காட்டப் பட்டுள்ளன.

| | | | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| | | அம்பாந்தோட்டை | 542 |
| | மட்டக்களப்பு | 259 | |
| புத்தளம் | 269 | | |

புத்தளத்திலிருந்து மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை ஊடாக யாழ்ப்பாணத்திற்குள்ள தூரம் எவ்வளவு? (...............)

**15) கரும்பூர் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயிற்சிப் புத்தகங்கள் விநியோகிப்பதற்கான விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழாக் கருமங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அமைக்கப்பட்ட தகவல் அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.**

| தரம் | வகுப்புக்களின் எண்ணிக்கை | மொத்த மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 4 | 148 |
| 2 | 4 | 146 |
| 3 | 4 | 147 |
| 4 | 4 | 140 |
| 5 | 4 | 130 |

01.பாடசாலையின் 1ஆந் தரத்திலும் 2 ஆந் தரத்திலும் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? (...............)
02.1ஆந் தரத்திலுள்ள எல்லா வகுப்புக்களிலும் மாணவர்களின் எண்ணிக்கை சமமாக இருப்பின் ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? (...............)
03.எல்லா வகுப்புகளிலும் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் சமமாக இருக்கக் கூடிய வேறொரு தரத்தின் பெயர் குறிப்பிடுக. (...............)
04.விழாவில் மாணவர் ஒருவருக்கு 6 புத்தகங்கள் வீதம் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தால் 3 ஆந் தர மாணவர்களுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான புத்தகங்களின் எண்ணிக்கை எவ்வளவு? (...............)
05.தரம் 5 இல் 5A வகுப்பில் 32 பேரும், 5B இல் 34 பேரும், 5C இல் 36 பேரும் 5D இல் 30 பேரும் வருகை தந்திருந்தால் அன்று விழாவுக்கு வராதவர்கள் எத்தனை பேர்? (...............)

**16) "அன்று ஒரு வெள்ளிக்கிழமை. நான் பாடசாலையில் இருந்து சற்று நேரத்துடன் வீட்டுக்கு வந்தேன். எனக்குத் த்லை வலித்தது. நான் தலையைப் பிடித்துக் கொண்டு அம்மா எனக்கு சுகமில்லை எனக் கூறிக் கொண்டு கட்டிலில் விழுந்தேன். அம்மா உடனே கட்டிலின் அருகில் வந்தார்...."** என்னும் சம்பவத்தினைத் தொடர்ந்து சரியான எழுவாய், பயனி லைகளுடன் ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனத்தில் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

1..................................................
..................................................
2..................................................
..................................................
3..................................................
..................................................
4..................................................
..................................................
5..................................................
..................................................
6..................................................

# மீள் பார்வை

# நோத்முதல் கோயல்லவா வரை 5

## ஆங்கிலேயர் இலங்கையைப் பிடித்தமை

க.சி.குலரத்தினம்



பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஐக்கிய ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தைப் போல வியாபாரம் மாத்திரம் செய்ததல்ல. பிரித்தானிய வர்த்தகர் திரைகடலோடித் திரவியஞ் சம்பாதித்துக் கொண்டே கடல் கடந்த நாடுகளில் தமது பேரரசை நிறுவிக்கொள்ள நிலங்களையும் பிடித்து வந்தனர்.

இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட தமது பொருட்களுக்கு வசதியான வெளி நாட்டுச் சந்தைகளே அவர்கள் முதலில் தேடியவை. சந்தைகளைக் கைப்பற்றி அவற்றைச் சாம்ராஜ்ஜியமாக்கி விட்டமை அவர்களுடைய சாமர்த்தியப் பண்பு.

எத்திசையும் புகழ் மணக்க இனிதிருந்த இந்தியாவின் இக் கரையில் இருந்த இலங்கையின் கறிச்சரக்குகள், மருந்து சரக்குகள், வாசனைச் சரக்குகள் ஐரோப்பிய வியாபாரச் சந்தைகளில் அராபிய வர்த்தகருக்கு அளப்பரிய ஆதாயத்தைக் கொடுத்தன. அவர்களுடைய மரக் கலங்கள் இலங்கைக்குப் பொன்னொடு வந்து பொருளோடு போன காலம் அக்காலம். இச் சரக்குகளை எல்லாம் தாமே நேரிற் சென்று வாங்கினால் என்ன என்று ஐரோப்பியர் வாயூறிய காலமும் அது.

அதனாலே இந்தியாவிலே பல பாகங்களிலும் போட்டியாக வியாபார நிலையங்களை அமைத்துக் கொண்டு பிரான்சும் இங்கிலாந்தும் போரிட்டும் வந்தன. வியாபாரச் சலுகையோடு சிந்தை நிறைவு பெறாத அவர்கள்; சிறிது சிறிதாக அரசியலிலும் தம் செங்கோலைச் செலுத்திச் சுவை கண்டனர். நெய்ப் போத்தலில் வாலைவிட்டு நக்கிச் சுவை கண்ட எலிகள் போல அவர்கள் நாட்டையே உறிஞ்சக் கொள்ளவும் தலைப்பட்டனர். தராசுபிடித்த கையாலே துப்பாக்கியையும் பிடித்து சுதேசிகளை அச்சுறுத்தினர். ஏழாண்டு யுத்தத்தில் நாடுபிடிப்பதில் ருசி கண்ட ஆங்கிலேயர் இந்தியாவுக்கு அண்மையில் தமக்கு ஒரு துறைமுகம் கிடைக்காதோ எனத் தவித்தனர். இலங்கை அக் காலத்தில் ஒல்லாந்தர் வசமிருந்தது.

இந்தியாவில் தங்கள் நாட்டாசையை நிறைவேற்றுவதற்கு இலங்கை கேந்திரத் தனமாய் அமையும் என்பதை ஐரோப்பிய நாடுகள் நன்கறிந்தன. அமெரிக்க சுதந்திரப் போரிலே ஒல்லாந்தர் அமெரிக்கருக்கு உதவியாய் இருந்தனர். அதனால் ஒல்லாந்தருடை நாடுகளை ஆங்கிலேயர் கைப்பற்றினர். அந்தக் காலத்திலே தான் ஒல்லாந்தருக்குச் சொந்தமான திருகோணமலையையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

அதனை நிரந்தரமாகத் தமதாக்கிக் கொள்வதற்கு எண்ணிய ஆங்கிலேயர் தமக்கு உதவியாயிருக்கும் வண்ணம் கண்டியரசனைக் கேட்டார்கள். இதற்குள் பிரெஞ்சுக்காரர் திருகோணமலையைக் கைப்பற்றி அதனை ஒல்லாந்தரிடம் மீளக் கொடுத்துவிட்டனர். ஆங்கிலேயர் தமது கைக்கெட்டிய பழம் வாய்க்கு எட்டாதமையை எண்ணி வருந்தினர்.

இதன்பின் நிலைமை வெகுவாக மாறியது. ஐரோப்பிய நாடுகளையெல்லாம் அடிமைப்படுத்திய நெப்போலியனுக்கு எதிராக ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் மகத்தான பாதுகாப்புக்கு ஒப்பந்தம் ஒன்றை எழுதிக் கொண்டனர். இவர்கள் நேயபான்மையோடிருந்த காலத்திலே நெப்போலியன் ஒல்லாந்தை அடிமைப்படுத்திவிட்டான். அதனால் ஒல்லாந்தின் அரசியற்றலைவனான உவிலியம் மன்னன் நாட்டை விட்டோடி இங்கிலாந்தில் தலைமறைவாய் இருந்தான். ஒல்லாந்தை அடிமைப்படுத்திய பிரெஞ்சுத் தளபதி பிச்சேகுரு என்பான் ஒல்லாந்தில் பட்டேசியன் குடியரசை நிறுவினான்.

இங்கிலாந்தில் புகழடைந்த ஒல்லாந்த மன்னனான வில்லியத்திடம் ஆங்கிலேயர் ஒரு தந்திரோபாயத்தைச் சொல்லிக் கொடுத்தார்கள். அதனை வேலை செய்தவர் பிரித்தானிய வெளிநாட்டு மந்திரியாயிருந்த கிறன்வில் பிரவுவாகும்.

அவர் ஒல்லாந்துக்குச் சொந்தமான கேப்மாகாணம், இலங்கை, யாவா ஆகிய இடங்களைப் பிரெஞ்சுக்காரர் கைப்பற்று முன் தாங்களே கைப்பற்ற முயற்சி செய்தார். அதன்படி ஆபத்துக் காலத்தில் அம் மூன்று இடங்களையும் பிரித்தானியர் பாது காத்து யுத்தம் முடிந்தபின் ஒல்லாந்தரிடம் திருப்பிக் கொடுப்பதாகத் திட்டமிட்டார்.

அதன்படி ஒல்லாந்த மன்னன் இலங்கையில் இருந்த தனது ஆள்பதியாகிய J.P. வான் எஞ்சல் பிக் என்பானுக்கு ஓர் உத்தரவுக் கடிதம் எழுதினான்.

அதில் "நம்பிக்கைக்கும் எனதன்புக்கும் உரிய அன்பனே! உமது பரிபாலனத்தில் உள்ள இலங்கையில் திருகோணமலையிலாவது வேறெங்காவது மாட்சிமை மிக்க பிரித்தானிய மன்னன் பிரானின் படைகளை, கடற்படைகளை, கப்பல்களை அனுமதித்து அவர்களை நேயர்களாகக் கருதி பிரெஞ்சுக்காரர் எங்கள் குடியேற்றத்தைக் கைப்பற்றாதிருக்க அவர்கள் உதவியையும் பெறுமாறு வேண்டிக்கொள்கிறேன். அங்ஙனமே கடவுள் எங்களைக் காப்பாற்றுவாராக."

கியூ, உமதன்புள்ள நண்பன்
7.2.1795 W.PR. V. ஒறேஞ்

(தொடரும்)

# கல்வியும் ஆசிரியத்துவமும் 1

## பேராசிரியர் அ. துரைராஜாவின் நினைவுப் பேருரை



**பேராசிரியர் க.கந்தசாமி**
பீடாதிபதி,
உயர் பட்டப்படிப்புகள் பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

எமது பல்கலைக்கழகம் கடந்த 34 ஆண்டு காலத்தில் சில துணைவேந்தர்களை, பல கல்விப் புலமையாளர்களை இழந்துள்ளது. அவர்களுள் கருத்து விமர்சனங்களுக்கு அப்பால் கற்றோராலும், மற்றோராலும் இனிது போற்றப்படும் உயர்ந்த மனிதர்களுள் அமரர் அழகையா துரைராஜா அவர்களுக்கு தனியிடமுண்டு. அவர் மறைந்து இன்று 14 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் எமது கல்விப் பாரம்பரியத்தில் அவரைப் பற்றிய பசுமையான நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கு இன் நினைவுப் பேருரையே சிறந்த எடுத்துக்காட்டாகும். இச் சந்தர்ப்பத்தில் அமரரின் கல்விப் புலமை பற்றியும், அவர் எமது சமூகத்திற்காற்றிய பணிகள் பற்றியும் அவர் மீது எமது சமூகம் கொண்டிருக்கும் மதிப்புப் பற்றியும் ஒருசில நினைவுகளை மீட்டுப் பார்ப்பதில் நான் ஆத்ம திருப்தி அடைகிறேன்.

1934 ஆம் ஆண்டு வடமராட்சி உடுப்பிட்டியில் உள்ள இமையாணன் கிராமத்தில் பிறந்த அமரர் துரைராஜாவின் வாழ்க்கை ஓட்டம் தமிழ்ப் பஞ்சாங்கம் கூறும் அறுபது ஆண்டு கால வாழ்க்கை வட்டத்திற்குள் அடங்கிவிட்டது. ஆயினும் அந்த அறுபது ஆண்டு கால எல்லைக்குள் அவர் சிறந்த மாணவனாக, ஆராய்ச்சியாளனாக, பல்கலைக்கழக ஆசிரியனாக, ஆளுமைமிக்க நிர்வாகியாக எமது சமூகத்தின் மத்தியில் பிரகாசித்த உயர்ந்த மனிதர் என்பதில் ஐயமில்லை. உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பயின்றபோது கல்வியில் அவர் பெற்ற சிறந்த பெறுபேறுகளாலும், மாணவனுக்குரிய ஆளுமை, ஒழுக்கநேயம் என்பவற்றாலும் அப் பாடசாலைகளே பெருமை பெற்றதாக அறிகிறேன். அதற்காகத் தான் அப் பாடசாலைகள் இன்றும் அவரைத் தமது பழைய மாணவன் எனப் பெருமைப்படுத்தி அவரை நினைவுபடுத்தி வரக் காரணம் எனக் கருதுகிறேன்.

1953 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு அனுமதி பெற்ற அமரர் 1957 இல் முதலாம் தரத்தில் அதி சிறந்த புள்ளிகளைப் பெற்ற முதல் தர மாணவனாக வெளியேறினார். 1958 இல் பிரித்தானிய அரசின் புலமைப் பரிசில் பெற்ற அமரர் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றான கேம்பிறிச் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டிருந்தார். அங்கு பேராசிரியர் கே.றோஸ்கோயி (Rosvcoe) வழிகாட்டலின் கீழ் மேற்கொண்ட மண்ணியல் பற்றிய ஆய்வில் அமரர் முன்வைத்த கருதுகோள்களும், முடிவுகளும் அவருக்குச் சர்வதேசப் புகழைத் தேடிக் கொடுத்தன. அவரது ஆய்வுப் புலமைதான் 1961 இல் கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர் அவர் அந் நாட்டிலேயே சிறிது காலம் குடியியியல் பொறியியலாளராகக் (Civil Engineer) கடமை யாற்றவும், பிற்காலத்தில் அந் நாட்டிலுள்ள வாட்டர்லு (waterloo -1969-70 காலப்பகுதியில்) ஆகிய பல்கலைக்கழகங்களில் வருகை தரும் பேராசிரியராகக் (Visiting Professor) கடமையாற்றவும் காரணம் எனக் கருதுகிறேன்.

> *உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 11.06.2008 அன்று யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா அவர்களின் 14ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.*
>
> *பழைய மாணவர் சங்கத் தலைவர் க.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி அவர்கள் "கல்வியும் ஆசிரியத்துவமும்" எனும் பொருளில் நினைவுப் பேருரை ஆற்றினார்.*
>
> *சமகாலத்திற்குப் பொருத்துடைய அந் நினைவுப் பேருரை வாசகர்களின் நன்மை கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.*
>
> *(ஆ-ர்)*

1962 இல் இலங்கை திரும்பிய அமரர் அவ்வாண்டிலேயே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் விரிவுரையாளராக இணைந்துகொண்டார். அன்றிலிருந்து 1994 ஆம் ஆண்டில் அவர் அமரத்துவம் அடையும் வரை உள்ள இடைப்பட்ட 32 ஆண்டு காலப் பகுதி அமரரின் சாதனை மிகுந்த காலமாகவே காணப்படுகிறது. இக்கால இடைவெளியில் தான் அவர் விரிவுரையாளர், பேராசிரியர், பீடாதிபதி, உபவேந்தர், இலங்கை விஞ்ஞான சங்க ஆயுட்கால அங்கத்தவர் எனப் பல பதவிகளை படிப்படியாகப் பெற்று புகழின் உச்சிக்கே சென்றார்.

இப் பதவிகளால் அவருக்கு கிடைத்த புகழ், பெருமை, பாராட்டுக்கள் என்பன அமரரின் கல்விப் புலமைக்கு, பட்டறிவுக்கு, நிர்வாகத் திறனுக்கு, ஆளுமைக்கு, மனிதநேயத்திற்குக் கிடைத்த சமூக அங்கீகாரமாகவே நான் பார்க்கிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் உபவேந்தராகப் பதவி வகித்த ஆறு ஆண்டு (1988-1994) காலத்தை எமது பல்கலைக்கழக வளர்ச்சியின் புதிய கால கட்டமாக நான் நோக்குகின்றேன். துணைவேந்தர் பதவி என்பது பெருமைக்குரியதாக இருப்பினும், அன்றைய காலகட்டத்தில் அது மகிழ்ச்சிக்குரிய பதவியாக அவருக்கு இருக்கவில்லை. அன்றைய அரசியல் சூழ்நிலையில் பல்வேறு இன்னல்களுக்கும், இடர்களுக்கும் மத்தியிலேயே அமரர் அப் பதவியை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார். அவருக்கிருந்த கல்விப் புலமை, நிர்வாகத்திறன், வெளியுலகத் தொடர்பு என்பவற்றால் மன அமைதி தரக் கூடிய உயர்ந்த பதவியைப் பெறும் வாய்ப்பும், தகமையும் அவருக்கு இருந்தது. ஆனால் இந் நாட்டையும், எம் மக்களையும் அதற்கும் அப்பால் சொந்த மண்ணில் சேவையாற்ற வேண்டும் என்ற ஆதங்கமும் அவரிடம் காணப் பட்டதால் இப் பதவி அவருக்கு மன நிறைவைக் கொடுத்தது. அவர் பதவி வகித்த ஆறு ஆண்டு காலத்தில் பெரும்பாலும் குடாநாட்டில் அமைதி யற்ற சூழ்நிலையே காணப்பட்டது. மின்சாரமின்மை, எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து வசதியின்மை, உணவுத் தட்டுப் பாடு என் பன அன்று சாதாரண நிகழ்வாகவே இருந்தன. ஆயினும் இந்த அசௌகரியங் களை எல்லாம் அமரர் பொருட்படுத்தாது துணைவேந்தர் பதவிக்குரிய அனைத்துப் பணிகளையும் மிகச் சிறப்பாகச் செய்த பெருமைக்குரியவர்.

எமது பல்கலைக்கழகத்தின் நோக்கம், வளர்ச்சி அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் என்பன கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி என்ற வட்டத்திற்குள் அமையவேண்டும் என்பதை நன்குணர்ந்து அவற்றை நடைமுறைப்படுத்திய துணைவேந்தர்களுள் அமரர் துரைராஜா அவர்களுக்கு தனியிடமுண்டு.

இளம் ஆசிரியர்கள் கற்பித்தலோடு நிற்காது ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பதற்காக பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி நிதியத்தை ஏற்படுத்திய பெருமை அவருக்கு உண்டு. அவ்வாறு ஆராய்ச்சி செய்யப்பட்டு பல்கலைக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பெறுபேறுகளில் தரமானவற்றை நூலாகப் பிரசுரிப்பதற்கென அமரரால் நூல் வெளியீட்டு நிதியம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இதனால் அவர் பதவி வகித்த காலத்தில் ஏறத்தாழ 12க்கும் மேற்பட்ட நூல்கள் பல்கலைக்கழக வெளியீடாக வந்தன. ஆயினும் அவர் ஏற்படுத்திய அவ்வரிய பணிகள் அமரரின் மறைவோடு மறைந்துவிட்டமை வேதனை தருவதாக உள்ளது.

பல்கலைக்கழகங்களில் ஆரவாரமின்றி நிலையான மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமை அமரர் துரைராஜா அவர்களுக்குண்டு. அந்த மாணவ பரம்பரையின் உதவியோடு அமரர் உருவாக்கிய துணைவேந்தர் மாணவ நல நிதியம் அமரரின் மகத்தான பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இன்று எமது பல்கலைக்கழகத்தில் வசதி குறைந்த பல மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு அமரர் ஏற்படுத்திய துணைவேந்தர் மாணவ நல நிதியமும் ஒரு காரணம் எனக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

(தொடரும்)

# இன்று ஒரு தகவல்

## உண்மை எது? பொய் எது?

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் அடிக்கடி காட்டுக்கு வேட்டையாடப் போவார். சில நண்பர்களையும் கூட அழைத்துக் கொண்டு போவார். காட்டுக்குப் போனதும் ஆளுக்கொரு பக்கமாகப் போய் வேட்டையாடுவார்கள். மாலையில் திரும்பி வந்து விடுவார்கள். மறுநாள் அரண்மனையில் உட்கார்ந்து ஒவ்வொருவரின் அனுபவங்களையும் கூறுவார்கள். அவர்களுடைய வீரத்துக்குத் தகுந்த பரிசை ராஜா கொடுப்பார்.

இதுமாதிரி ஒருதடவை எல்லோரும் வேட்டைக்குப் போய் திரும்பிவந்ததும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவன் தன்னுடைய வீரதீரச் செயலைப் பற்றி அளக்க ஆரம்பித்தான்.

"அரசே! நேற்று காட்டில் என்ன நடந்தது தெரியுமா? எனக்கு நேராக ஒரு சிங்கம் வாயைத்திறந்து கொண்டு வந்தது. நான் பயப்படவில்லை! உடனே ஒரு கல்லை எடுத்து குறிபார்த்து வீசினேன். அது சிங்கத் தின் வாய்க்குள் போய் மாட்டிக்கொண்டது. அவ்வளவு தான்! சிங்கம் என்னைப் பார்த்து பயந்து கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டது!" என்றான்.

"ஆகா! பலே!" என்று எல்லோரும் கைதட்டினார்கள். இரண்டாவது ஆள் சொல்ல ஆரம்பித்தான்.

"அரசே... நான் போன வழியில் இரண்டு பெரிய மலைப் பாம்பு கிடந்தது. என்னை விழுங்குவதற்கு வந்தது. நான் என்ன செய்தேன் தெரியுமா? அந்த இரண்டு பாம்பின் வாலையும் ஒன்றாகச் சேர்த்து முடிச்சு போட்டு விட்டேன்! அவ்வளவுதான்! அது அங்கேயும் இங்கேயும் இழுக்க இழுக்க முடிச்சு நல்லா இறுகிப் போச்சு!" என்றான்.

"அற்புதம்!" என்று எல்லோரும் கைதட்டினார்கள். அடுத்ததாக மூன்றாவது ஆள் சொல்ல ஆரம்பித்தான். "அரசே! நான் போன பாதையின் குறுக்கே ஒரு ஆறு! அதில் இறங்கி குளித்தேன். யாரோ காலைப் பிடித்து இழுப்பதாகத் தோன்றியது. திரும்பிப் பார்த்தால் ஒரு முதலை! நான் உடனே பாய்ந்து அதன் முதுகில் போய் உட்கார்ந்து அதை கரைக்கு நீந்த வைத்தேன். கரை வந்ததும் குதித்துவிட்டேன்!" என்றான்.

"அடடா! எப்படிப்பட்ட வீரம்!" என்று எல்லோரும் கைதட்டினார்கள். நான்காவது ஆள் எழுந்தான்.

"மன்னா! நான் போன இடத்தில் ஒரு கரடி என்னைத் துரத்த ஆரம்பித்தது. நான் மலை உச்சிக்கு வந்துவிட் டேன். அதற்குப் பின் ஒரு அடி எடுத்து வைத்தாலும் அதல பாதாளத்தில் விழ வேண்டியது தான். அந்த நேரம் பார்த்து ஒரு பெரிய ராட்சசக் கழுகு அந்தப் பக்கமாக வந்தது! உடனே நான் உயரே எழும்பி அதன் காலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே வந்தேன். ஒரு நல்ல இடம் வந்ததும் தொப்பென்று குதித்து வந்து விட்டேன்!" என்றான். இதற்கும் எல் லோரும் கைதட்டி னார்கள். கடைசியாக ஒரு ஆள் எழுந்தான்.

"அரசே! நான் போன வழியில் ஒரு பெரிய யானை குறுக்கே வந்தது. நான் பயந்து ஓடவில்லை! உடனே என்ன செய்தேன் தெரியுமா? அதன் வாலைப் பிடித்து தூக்கி வேகமாக வீசி எறிந்தேன். அவ்வளவுதான். அந்த வேகத்தில் யானை மேலே போக ஆரம்பித்தது. இன்னும் போய்க் கொண்டே இருக்கிறது. கீழே விழவே இல்லை!" என்றான். இதைக் கேட்ட ராஜாவுக்குக் கோபம் வந்தது. "என்னை என்ன முட்டாள் என்று நினைத் தாயா? யானையை மேலே பிடித்து தூக்கினேன் என்று சொன்னால் அதை நான் நம்பவேண்டுமா?" என்றார். உடனே இவன் பணிவாக பதில் சொன்னான்.

"அரசே... ஒரு சிங்கத்தின் வாயில் கல்மாட்டிக் கொண்டதையும், மலைப்பாம்பின் வாலைப்பிடித்து முடிச்சு போட்டதையும், முதலையின் முதுகில் சவாரி செய்ததையும், கழுகின் காலைப்பிடித்துக்கொண்டு பறந்ததையும் நம்பும்போது நான் சொன்னால் மட்டும் நம்பக்கூடாதா? என்று கேட்டேன்.

பொய் சொன்னவர்களெல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டனர். ராஜா அவர்களைப் பார்த்து, "நீங்கள் எல்லோரும் என்னை முட்டாளாக்கி விட்டீர்கள்... கடைசியாக பேசிய இவன்தான் எனக்கு உண்மை எது பொய் எது என்பதை புரிய வைத்தான். இவன்தான் தைரியசாலி!" என்று கூறி அவனுக்கே பரிசு கொடுத்துப் பாராட்டினார்.

உண்மையை நிலைநாட்டுபவன் தான் உண்மையான வீரன் என்பதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்! இந்தக்காலத்தில் பொய் சொன்னால்தான் பிழைக்கமுடியும் என்பது சிலரின் நம்பிக்கை!

ஒரு அப்பாவுக்கு... தன் மகனுக்குப் பொய் சொல்லத் தெரியவில்லையே என்று கவலை. அதனால் இவனை அழைத்துக் கொண்டு போய் நடுக்கடலில் விட்டுவிடுவோம் என்று அழைத்துக்கொண்டு கடற்கரைக்குப் போனார். மகனுக்குச் சந்தேகம். "எங்கே அப்பா என்னை அழைத்துக்கொண்டு போகிறீர்கள்? என்று கேட்டான். "கடலில் மீன்பிடிக்க கற்றுத் தரப்போகிறேன்! உனக்கு" என்றார்.

"நான் ஏற்கனவே மீன்பிடித்து விட்டேன்!" என்றான் மகன்.

"எங்கே அது?" என்று கேட்டார் தகப்பன்.

"சுட்டுச்சாப்பிட்டேன்!" என்றான் மகன்.


தகப்பன் பார்த்தார். "சரி... நம்முடைய பிள்ளை பிழைக்கும்." என்று சொல்லி திரும்ப அழைத்து வந்துவிட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 'தசாவதாரம்' படத்தைப் பார்த்து கமலுக்கு ரஜனி பாராட்டு

(சென்னை)

கமல் பத்து வேடங்களில் நடித்து நாடெங்கும் எதிர்பார்ப்பை கிளப்பி




உள்ள தசாவதாரம் படம் இன்று ரிலீசாகிறது. இப்படத்தை பார்க்க நடிகர், நடிகைகள் உள்ளிட்ட திரை உலக பிரமுகர்களும், ரசிகர்களை போல் ஆர்வப்பட்டனர். அவர்களுக்காக கமல் சிறப்புக் காட்சிக்கு ஏற்பாடு செய்தார்.

ரஜனிக்கு நுங்கம் பாக்கம் "போர் பிரேம்" தியேட்டரில் சிறப்பு காட்சி திரையிடப்பட்டது. படம் பார்க்க ரஜனி தனியாக வந்தார். அவரை கமல் வரவேற்று இருக்கையில் அமர வைத்தார் படத்தை ரொம்பவும் ரசித்து பார்த்தார்.

சென்னையை சுனாமி விழுங்குவது போல் படமாக்கப்பட்டி ருந்த முதல் காட்சியை பார்த்து பிரமித்தார். சிதம்பரத்தில் ரங்கநாதர் சிலையுடன் கமலை சோழ மன்னன் கடலுக்குள் வீசும் காட்சி ரஜனியை ஈர்த்தது.

வைணவ இளைஞன், அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், மன நிலை சரிஇல்லாத வயது முதிர்ந்த பாட்டி, ஜப்பானிய கரத்தே மாஸ்டர், பஞ்சாபி கஜல் பாடகர் , நியாயத்துக்காக போராடும் தலித் இளைஞன், கத்தி துப்பாக்கியுடன் கொலை வெறியுடன் திரியும் அமெரிக்க இளைஞன், எட்டு அடி உயரத்தில் அப்பாவித்தனமான முஸ்லிம் இளைஞன், துடிப்பான விஞ்ஞானி, தெலுங்கு உளவுத்துறை அதிகாரி என கமல் பத்து வேடங்களில் வித்தியாசமாக நடித்த காட்சிகள் ரஜனியை கவர்ந்தன.

படம் முடிந்ததும் கமலின் கைகளை பிடித்து படம் பிரமாண்டமாக இருக்கிறது என்று சொல்லி பாராட்டினார். இதர நடிகர்-நடிகைகள், டைரக்டர்களுக்கு சாலி கிராமம் பிரசாத் 'லேப்' தியேட்டரில் தசாவ தாரம்



சிறப்பு காட்சி திரையிடப்பட்டது.

சரத்குமார் அவரது மனைவி ராதிகா , பிரபு, சூர்யா, ஜெயம் ரவி, பரத், நாகேஷ், சரத்பாபு, மனோரம்மா, டைரக்டர்கள் பாலச்சந்தர் , தரணி, விஷ்ணுவர்த்தன், உள்ளிட்ட பலர் படம் பார்த்தனர். மனோரம்மா படம் பார்த்து அழுதார். நிஜமாகவே கமல் உலகநாயகன் தான் என்று நாதழுதழுக்க சொல்லி பாராட்டினார். (அ)

# பல பிரபாகரன்களை உருவாக்கும் விதத்தில் அரசு செயற்படுகிறது

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு பிரபாகரனை இல்லாதொழிப்பதற்காக பல பிரபாகரன்களை உருவாக்கும் விதத்தில் அரசாங்கம் செயற்படுகிறது. இலங்கையில் இன்று சர்வாதிகார ஆட்சியே நடைபெறுகின்றது. ஜனநாயகம் குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி மக்கள் பிரிவின் தலைவரும் எம்.பியுமான மங்கள சமரவீர தெரிவித்தார்.



கொழும்பு றொஸ்மிட் ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அதன் தலைவரும், எம்.பியுமான மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

சட்ட விரோதமான முறையில் மாகாண சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடத்தப்படவுள்ளது. மக்கள் தீர்ப்பு எவ்வாறு உள்ள தென்பதை அறியவே இந்த விளையாட்டை அரசாங்கம் மேற்கொள்கிறது. ஜனாதிபதிக்கு நாம் சவால் விடுக்கிறோம் முடிந்தால் பொதுத் தேர்தல் நடத்தி வெற்றிபெற்று காட்டட்டும் பார்க்கலாம்.

அது முடியாது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கம் நிச்சயம் தோல்வியைத் தழுவும். இலங்கையில் இன்று சர்வாதிகார ஆட்சியே நடக்கின்றது. ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு ஒரு குடும்பம் நாட்டையே சீரழித்து வருகிறது.

நாட்டின் இன்றைய துர்ப்பாக்கிய நெருக்கடி நிலைக்கு நானும் பொறுப்பு கூறவேண்டும். தற்போதைய ஜனாதிபதியை நாமே உருவாக்கினோம். ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை. அச்சுறுத்தப்படுகிறார்கள்.

உரிமைகளுக்காக விலையேற்றங்களை கண்டித்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியாதுள்ளது. பாதாள குழுக்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்தப்படுகிறது.

அரசாங்கத்திற்கு சார்பாக நடந்து கொள்ளும் பொலிஸாருக்கு மாலை மரியாதை, பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றன.

யுத்தநிறுத்த புரிந்துணர்வு நடைமுறையில் இருந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த யுத்தம் இன்று முழு நாட்டிற்குள்ளும் விஸ்தரித்துள்ளது.

யுத்தத்தை கிராமத்திற்குள் கொண்டு வந்த பெருமை ஜனாதிபதிக்கே சேரவேண்டும். பயங்கரவாதத்தை ஒழிப்பதாக கூறிக் கொண்டுஅரச பயங்கரவாதம் தாண்டவமாடுகிறது. காணாமல் போதல், கடத்தல், கப்பம் பெறல் போன்ற மனித உரிமைகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளது. எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதற்கு உலகச் சந்தையையும் யுத்தத்தையும் அரசாங்கம் காரணம் காட்டுகிறது.

யுத்தமும் உலகச் சந்தையும் இதற்கு காரணமல்ல. 110 அமைச்சர்களின் பாராமரிப்பு செலவுகளும் ஊழல் மோசடிகளுமே இவற்றிற்கு காரணமாகும்.

இந்தியாவில் பணவீக்கம் 7 வீதமே ஆகும். அதனையும் எவ்வாறு குறைப்பதென அந்நாட்டு அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. ஆனால் எமது நாட்டில் பணவீக்கம் 30 வீதமாகும். அதனை குறைப்பது எவ்வாறு என இந்த அரசாங்கம் ஆராய்வதில்லை.

எமது சமூகம் இன்று பல்வேறு நெருக்கடிகளுக்குள் சிக்கிக் கொண்டு தவிக்கின்றது. மக்கள் அச்சத்துடன் வேதனையுடன் வாழ்கின்றார்கள். இவ்வாறான நிலை ஏற்படுவதற்கு நானும் காரணமாவேன்.

நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் பிரதான கட்சி, களான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஐ.தே. கட்சியும் இணைய வேண்டும். நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற பிரதான கட்சிகளுடன் ஜே.வி.பி. யும் இணைய வேண்டும்.

இவ்வாறு இணைய வேண்டுமென கோருவது குடும்பத்தையோ குழுக்களையோ பாதுகாப்பதற்கல்ல என்றார். (அ)

# இராசிபலன்

13.06.2008
(வைகாசி 31, வெள்ளிக்கிழமை)
சித்திரை முழுவதும்
தசமி பிற்பகல் 02.50 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை
சுபநேரம்-05.53-07.23 மணிவரை
பாபஹரதசமி

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம். செய்தொழில்விருத்தி. தேகநலன். பொருள்சேர்க்கை |
| இடபம் | திடீர் பயணம், சுகவாழ்வு, சத்துரு ஜெயம், காரிய நன்மை. |
| மிதுனம் | குடும்பக்கவலை, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| கடகம் | மனச்சோர்வு, சுபசெலவு, கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு. |
| சிங்கம் | இனிய சம்பவம், சகோதரர் உதவி, வாக்கு மேன்மை. |
| கன்னி | மாதர்நட்பு, வீண்விவாதம், காரிய தாமதம், திடீர்நன்மை. |
| துலாம் | ஜனவசியம், நல்லமகிழ்ச்சி, நண்பர்கள் உதவி, தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படுதல், முயற்சி தாமதம். |
| தனுசு | கலந்துரையாடல், தெய்வதரி சனம், தொழில் சிந்தை, காரிய அனுகூலம். |
| மகரம் | நிலைமாற்றம், சுபநிகழ்ச்சி, கடின உழைப்பு, கீர்த்தி. |
| கும்பம் | புதிய திட்டமிடல், அச்சமானநிலை, பொருள் விரயம், உத்தியோக பங்கம். |
| மீனம் | போசனசுகம், உடல்நலக்குறைவு, முயற்சி தடங்கல், பிரயாண பயம். |

வளவன்

# சொந்த மண்ணில் பங்களாதேஷ் பரிதாபம்

# இறுதிப் போட்டியில் இந்தியா - பாக். மோதல்



காம்பீர் அதிரடி சதம் அடிக்க இந்திய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதன் மூலம் பங்களாதேஷ் அணி சொந்த மண்ணில் நடைபெற்ற முத்தரப்புத் தொடரில் இரண்டு லீக் போட்டிகளிலும் தோல்வியடைந்து இறுதிப் போட்டி வாய்ப்பையிழந்து.

பங்களாதேஷில் நடைபெற்று வரும் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதும் முத்தரப்புத் தொடரில் நேற்று மிர்பூரில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான லீக் போட்டியில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 222 ஓட்டங்களையெடுத்தது.

இதில் ரகிபுல் ஹசன் 89 ஓட்டங்களையும் அணித் தலைவர் மொகமெட் அஷ்ரபுல் 36 ஓட்டங்களையும் மகமூதுல்லா 24, அலோக் கபாலி 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஆர்.பி.சிங் 3 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 223 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி காம்பீர், சேவாக்கின் அதிரடியான ஆட்டத்தால் 35.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 223 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி வெற்றது.

இதில் கௌதம் காம்பீர் ஆட்டமிழக்காமல் 101 பந்துகளில் (13 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட) 107 ஓட்டங்களையும், வீரேந்திர சேவாக் 32 பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட) 59 ஓட்டங்களையும் மற்றும் ரோகித் சர்மா, யுவராஜ் சிங் ஆகியோர் தலா 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி நான்கு புள்ளிகளுடனும் பாகிஸ்தான் அணி இரண்டு புள்ளிகளுடனும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று நாளை மோதுகின்றன.(05)



## சானியா தோல்வி

பர்மிங்ஹாம் ஓபன் டெனிஸ் தொடரின் 2-வது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

உலகின் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் டபிள்யு. டி.ஏ. அந்தஸ்துப் பெற்ற டெனிஸ் தொடர் இங்கிலாந்தின் பர்மிங்காமில் நடக்கின்றது. இதில் இந்திய வீராங்கனைகள் சானியா மிர்சா, சுனிதா ராவ் விளையாடி வருகின்றனர். காயம் காரணமாகப் பல மாதங்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதைத் தவிர்த்து வந்த சானியாவுக்கு 'பை' கொடுக்கப்பட்டது. நேற்று முன்தினம் நடந்த 2-வது போட்டியில் இவர் நியூசிலாந்தின் மரினா எரோகோவிச்சிடம் தோல்வியடைந்தார். (05)




# சுவிட்சர்லாந்து வெளியேற்றம்; போர்த்துக்கல் காலிறுதிக்குள்

13-வது யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடர் சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியாவில் நடைபெற்று வருகின்றது. ஜெனீவாவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஏ பிரிவில் உள்ள போர்த்துக்கல் - செக்குடியரசு அணிகள் மோதின,

இரு அணிகளுமே முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளதால் ஆட்டம் மிகவும்



விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் போர்த்துக்கல் வீரர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள். அந்த அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. போர்த்துக்கல் தரப்பில் டெகோ (8- நிமிடம்), கிறிஸ்டியானா ரொனால்டோ (63-வது நிமிடம்), குரேஷ்மா (91- நிமிடம்) ஆகியோரும்

செக்குடியரசு தரப்பில் லிபாசியன் கோவும் (17-வது நிமிடம்) கோல் அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் போர்த்துக்கல் 6 புள்ளிகள் பெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றது.

இத் தொடரில் காலிறுதியில் நுழைந்த முதல் நாடு போர்த்துக்கல் ஆகும். பாசல் நகரில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில் போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான சுவிட்சர்லாந்து - துருக்கி (ஏ பிரிவு) அணிகள் மோதின.

இரு அணிகளுமே முதலாவது ஆட்டத்தில் தோற்றுயிருந்ததால் இந்தப் போட்டி மிகவும் முக்கியமானதாக இருந்தது. ஆட்டத்தின் 32 நிமிடத்தில் சுவிட்சர்லாந்து முதல்கோலை அடித்தது.

ஹசன் யக்கீன் இந்தக் கோலை அடித்தார். முதல்பாதி ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. 57 -வது நிமிடத்தில் துருக்கி பதில் கோல் அடித்து சமன் செய்தது.

செமித் சென்டாக் தலையால் முட்டி இந்தக் கோலை அடித்தார். ஆட்டம் முடிந்ததற்கான விசில் ஊதும் நேரத்தில் துருக்கி 2-வதுகோலைப் போட்டு அதிர்ச்சி கொடுத்தது.

அர்தா தூரன் இந்தக் கோலை அடித்தார். இதன் மூலம் துருக்கி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிவெற்றது. இந்தத் தோல்வியால் சுவிட்சர்லாந்து தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.

அந்த அணி கடைசி லீக் ஆட்டத்தில் போர்த்துக்கலை 15 ஆம் திகதி எதிர்கொள்கின்றது. இதில் வெற்றி பெற்றால் எந்தப் பலனும் இல்லை. ஆறுதலாக அமையும்.

அதே நாளில் துருக்கி - செக்குடியரசு அணிகள் மோதுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி காலிறுதிக்குள் நுழையும். மாறாகச் சமநிலையானால் கோல் அடிப்படையில் இரண்டில் ஒன்று காலிறுதிக்குள் நுழையும். (05)

## ஆஸி.அணியில் கெசனுக்கு வாய்ப்பு

மேற்கிந்தியத்தீவுகளுடனான மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் இடது கை சுழற்பந்து வீச்சாளர் பியு கெசன் இணைக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா அணியின் சுழற்பந்து



வீச்சாளராகச் செயற்பட்டு வந்த ஸ்டுவட் மக்கில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்தே கெசனுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

பாபடோசில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியைத் தொடர்ந்து மக்கில் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.


25 வயதான பியு கெசன் இதுவரை 40 முதற்தரப் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் அவர் 107 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இதன் பந்து வீச்சு சராசரி 40.36 ஆகும்.

இதன்படி அவர் அவுஸ்திரேலியாவின் 401-வது டெஸ்ட் வீரராக இடம்பிடிக்கவுள்ளார். அவுஸ்திரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டி நேற்று பாபடோசில் ஆரம்பமானது. (05)

# இருபது - 20 கிரிக்கெட்டுக்கு பரிசு தொகை 20 மி.டொலர்கள்

பிரபல அமெரிக்க கோடீஸ்வரர் சர்அலன் ஸ்டான்போர்ட் கிரிக்கெட்டில் முதலீடு செய்யப் போவதாக ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதன் பிரகாரம் இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களை உள்ளடக்கிய கரீபியன் ஓல்ட் ஸ்டார் அணிக்கும் நவம்பர் முதலாம் திகதி அன்டிகுவாவில் ஸ்டான்போர்ட் இருபது -20 கிரிக்கெட் போட்டி நடக்க இருப்பதாக நேற்று முன்தினம் அவர் அதிகார பூர்வமாக அறிவித்தார். இதில் என்ன ஆச்சரியம் என்கின்றீர்களா? இதன் பரிசுத் தொகையைக் கேட்டால் வாயடைத்துப் போவீர்கள். இந்தப் போட்டிக்கான மொத்தப் பரிசுத் தொகை 20 மில்லியன் டொலர்.



கிரிக்கெட்டில் இதுவரை யாரும் இந்தளவுக்குப் பரிசுத் தொகை வழங்கியதில்லை. இதில்ஒருஅணி வெற்றி பெற்றால் அந்த அணியில் ஆடும் 11 வீரர்களுக்கும் தலா ஒரு மில்லியன் டொலர்கள் வீதம் உறுதியாகப் பரிசு கிடைக்கும்.

அணியில் இடம்பெறாத வீரர்களுக்கு ஒரு மில்லியன், அணி நிர்வாகத்துக்கு ஒரு மில்லியன். மற்றவை இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் சபை பகிர்ந்து கொள்ளும்.

ஆனால் தோல்வியடையும் அணிக்குப் பரிசு கிடையாது. லண்டன் லோஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் போட்டியில் வழங்கப்படும் பரிசுத் தொகை நிருபர்கள் மத்தியில் காண்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அலன் ஸ்டான்போர்ட் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)

# திருமண வைபவங்களுக்காக ஹோட்டல்களை பதியத் தடை

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சார்க் மாநாடு நடைபெறவுள்ள யூலை 27ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 3ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திருமண வைபவங்களுக்கோ ஏனைய நிகழ்வுகளுக்கோ அறைகளை பதிவு செய்வதை தவிர்க்குமாறு பிரபல ஹோட்டல்களுக்கு வெளிவிவகார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

நாட்டின் சூழ்நிலையால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் ஹோட்டல்கள் இந்த சுற்றறிக்கையின் மூலம் மேலும் பாதிப்புக்களை எதிர்நோக்குமென ஹோட்டல் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் நடைபெறவுள்ள 15-வது சார்க் மாநாட்டின் பாதுகாப்புக் காரணங்களை கருத்திற் கொண்டே இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டுக்குவரும் வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம் சில பகுதிகளை மூடிவிடும்.

இருப்பினும் எமது நட்டங்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கப்படாது. அவ்வாறு வெளிநாட்டுப் பிரமுகர்களுக்காக ஹோட்டல்களை பதிவு செய்தாலும் ஹோட்டலின் மூன்றில் ஒரு பகுதியை மாத்திரமே அவர்கள் பதிவு செய்வார்கள் என கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

தமது ஹோட்டல் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருப்பதன் காரணமாக ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் சுற்றறிக்கையின் காரணமாக குறித்த காலப்பகுதியில் முதன்மைக் ஹோட்டல்களுக்கு 10-15 மில்லியன் ரூபாய்களுக்கு நட்டம் ஏற்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# யாழ்ப்பாணத்துக்கு புத்தகங்கள் 'யால' கப்பல் மூலம் அனுப்பி வைப்பு

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கென அனுப்பப்படாமல் இருந்து எஞ்சிய இலவச பாடசாலைப் பாடப் புத்தகங்கள் கடந்த புதன்கிழமை யால கப்பல் மூலம் கொழும்புத் துறை முகத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருந்ததாக கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பிரதி ஆணையாளரும் தமிழ்ப் பிரிவு பொறுப்பாளருமான லெனின் மதிவானம் தெரிவித்தார்.

தரம் 7, 11க்கான தமிழ் மொழிப் புத்தகங்களும் ஆங்கில பாடப்புத்தகங்களுமாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் நூல்கள் அனுப்பப்பட்டன. அனுப்பப்பட்ட பாடப்புத்தகங்கள் இன்னும் ஒரு வாரத்தில் யாழ். சென்றடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அடுத்த வருடத்திற்கான இலவச பாடப்புத்தகங்களை சமகாலத்தில் சகல பாடசாலைகளுக்கும் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் உறுதியளித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கடந்த செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ச-5)

# பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தென்னிந்தியத் திருச்சபை ஆயர் பேச்சு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை யாழ்ப்பாண தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி வண.கலாநிதி டானியல் தியாகராஜா சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இருவருக்கும் இடையிலான இச்சந் திப்பு பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் மற்றும் அங்குள்ள பொதுமக்களின் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாக இருவரும் விரிவாக கலந்துரையாடினர். பாதுகாப்பு அமைச்சிடம் ஆலய நிர்வாகம் எழுத்து மூலமாக கேட்டுக் கொண்டதற்கமையவே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# கொட்டாஞ்சேனை...

உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. இவர் வெளிநாட்டுக்குச் செல்லும் நோக்கத்தில் விடுதியில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதேபோல் கொட்டாஞ்சேனை அல்விஸ் பிளேஸைச் சேர்ந்த வேலாயுதம் மதுரகுணசிங்கம் (வயது 30) எனும் குடும்பஸ்தர் நேற்று முன்தினம் இரவு 10.05 மணியளவில் வான் ஒன்றில் வந்த சிலரினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

சிவில் உடையில் வந்த ஆயுததாரிகளினாலேயே இவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். கிளிநொச்சியைச் சேர்ந்த இவர் கடந்த 3 வருடமாக கொழும்பில் வசித்து வருவதாக பொலிஸாருக்கு உறவினர்கள் அளித்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொட்டாஞ்சேனை புதுச்செட்டித்தெரு பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக கொட்டாஞ்சேனைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

டாசன் றொபிட்சன் என்னும் இளைஞனே இவ்வாறு காணாமல் போயுள்ளார். கடந்த 10 ஆம் திகதி 8 மணியளவில் வீட்டில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த இவர் திடீரென காணாமல் போயுள்ளார். (ச-5)

# ஐக்கிய தேசியக் கட்சியின் மனுவை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி அந்த மனு எதிர்வரும் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அன்றைய தினம் மன்றில் பிரசன்னமாகுமாறு தேர்தல் ஆணையாளர் உட்பட்ட பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமையால் அதன் முடிபுகளை இரத்துச் செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தமது மனுவில் கோரியுள்ளது. (எ-5)

# வன்னி சென்று...

தெளிவான விளக்கம் எமக்கு தரப்படவேண்டும்.

ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பதென்ற உத்தரவாதத்தை விடுதலைப் புலிகள் எமக்கு தந்தால் மாத்திரமே தீர்வை நோக்கிய அமைதி முயற்சிகளை ஆரம்பிக்க முடியும்.

இதற்கே இணங்காதவர்களுடன் பேச்சு மேசையில் இணக்கப்பாடு பற்றி எப்படி பேசுவது? வன்னிக்கு ஜோன் ஹன்சன் பௌயர் சென்றால் புலிகள் அவரை புகைப்படமெடுத்து விட்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஜோன் ஹன்சன் பௌயர் பார்வையிட்டார் என்று கூறுவர்.

இந்தப் பிரசார வேலைகளுக்கு எல்லாம் அரசு தயார் இல்லை என்றார் அவர். (ச-5)

# காணாமல் போதலை...

குறிவைத்து முறைப்பாடுகள் செய்யப் படவில்லை என செயற்குழு அறிக்கை கூறுகிறது.

பலவந்தமாக காணாமல் போனவர்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு அரசாங்கம் குழுவொன்றை நியமிக்க வேண்டும்.

பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்களைத் தடுப்பதற்கும் மக்களைப் பாதுகாப்பதற்கும் இலங்கை அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருக்கும் ஐக்கிய நாடுகள் செயற்குழு, கடத்தல்களில் ஈடுபட்டவர்கள் மீது விசாரணைகளை நடத்தி அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்களின் நிலைமைகள் மற்றும் அவர்கள் எங்கு உள்ளார்கள் என்பது பற்றி கண்டறிந்து கொடுப்பதுமே தமது செயற்பாடு எனத் தெரிவித்திருக்கும் அச்செயற்குழு, எனினும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளமை பற்றிக் கவலையடைவதாகக் கூறியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு காணாமல் போனவர்களை கண்டறிவது தொடர்பான தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அழைப்பை இலங்கை காலதாமதமின்றி விடுக்கவேண்டுமெனவும் பலவந்தமாகக் காணாமல்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழு மீண்டும் வலியுறுத்தி கூறியுள்ளது. (ச-5)

# பிரபாகரனை கைது...

நோக்கமாகும் என இராணு வத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கூறியுள்ளதாவது,

பிரபாகரன் மறைந்திருக்கும் முல்லைத்தீவிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமை படையினர் சுற்றி வளைத்துள்ளனர். இராணுவத்தின் நான்கு பிரதான படையணிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அவ்விடத்தை விட்டு தப்பிச் செல்ல முடியாமல் பிரபாகரன் அடைக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தின் 56,57,58 மற்றும் 59-வது படையணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தை கைப்பற்றும் நோக்கில் படையெடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் படையெடுப்புக்களை மேலும் தீவிரப்படுத்துவதற்காக விடேச அதிரடிப்படையின் 2ஆம்இலக்க படையணியினரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இவ்வாறானதொரு படையெடுப்பின் மூலமாகவே விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான 14-வது பேஸ் முகாம் படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வருகை தந்தபோது பிரபாகரன் இந்த முகாமிலேயே மறைந்திருந்துள்ளார். இந்திய இராணுவத்தினர் நாட்டை விட்டு வெளியேறியபோதிலும் இலங்கை பாதுகாப்பு படையினருக்கு பயந்து நிலத்தின் கீழ் மறைந்திருந்தாலும் படையினர் அவரை அடையாளம் கண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கின் சுமார் 800 கிலோமீற்றர் பரப்பளவு நிலம் தற்போது படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இன்னும் 21 கிலோமீற்றரே படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவுள்ளது.

பாதுகாப்பு படையினருக்கு நேரடியாக முகம் கொடுத்து யுத்தத்திற்கு வரமுடியாது மறைந்திருக்கும் பிரபாகரன் தெற்கில் வாழும் அப்பாவி பொதுமக்களை மறைந்திருந்து தாக்குதல் நடத்தி வருகிறார்.

இவரது இந்நிலையை உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டும். வன்னிப் படையெடுப்பில் ஈடுபட்டுள்ள படையினர் சிறந்த மனத் தைரியத்துடனும் விட்டுக் கொடுப்புடனும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றமை நாம் பெற்றுள்ள வெற்றிகளுக்கான முக்கிய காரணம் என்றார். (எ-5)

# விமான...

விமான சேவை நிறுவனங்கள் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமான டிக்கெட்டுக்களின் விலையேற்றம் காரணமாக மத்திய கிழக்கு உள்ளிட்ட வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு வதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# கிராம சேவையாளர்...

யாழ்ப்பாணம்,சண்டிலிப்பாய், கோப்பாய் பிரதேச செயலகங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் 23ஆம் திகதியும் வேலணை, உடுவில் பிரதேச செயலகங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் 24ஆம் திகதியும் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள்/ பிரதேச செயலகங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் 25ஆம் திகதியும் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும்.

ஏனைய பிரதேச செயலகங்கள்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலிருந்து மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பட்டியல் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றதும் நேர்முகப் பரீட்சை பற்றிய அறிவித்தல் அறியத்தரப்படும். (ச)

# இலங்கையில் இடம்பெறும்...

நாட்டின் தேசியத்தில் அக்கறை காட்டுவதுடன் பிராந்திய நாடுகளுடன் இணைந்து செயற்படுவது அவசியம் என இந்திய வெளிவிவகார சேவைகளின் அதிகாரிகளை சந்தித்த இந்தியப் பிரதமர் வலியுறுத்தியிருந்தார்.

சமாதானமான சூழ்நிலையுடைய அயல் நாடுகளே எமக்குத் தேவை. அதனால்தான் நாம் எமது அயல் நாடுகளான சீனா, பாகிஸ்தான,பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகியவற்றுடன் சிறந்த உறவுகளை பேண வேண்டியுள்ளது.

எமது தேசியக் குறிக்கோளை அடைவதற்கு அவர்களின் நலனிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டியுள்ளது என மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

எமது அயல் நாடுகளுடன் குறிப்பாக பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் ஸ்திரத் தன்மையில் நாங்கள் அக்கறை செலுத்தவேண்டும். ஏனெனில், அவர்கள் தமது பிரச்சினைகளைச் சரியான முறையில் எதிர்கொள்ளாவிட்டால் அவை எமக்கு எதிரான பிரச்சினைகளாக மாறிவிடும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் தற்பொழுது காணப்படும் மோதல்கள் நிறைந்த சூழ்நிலையானது இந்தியாவின் சமாதானம் மற்றும் பாதுகாப்பில் நிச்சயமாக தாக்கத்தை செலுத்தும் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக புதுடில்லி உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

அயல் நாடுகளில் ஏற்படும் மோசமான சூழ்நிலைகள் இந்தியாவுக்கு பாரிய சவாலாக அமைந்துள்ளன என்றார் அவர்.

அத்துடன் பாகிஸ்தானில் ஆட்சியமைத்திருக்கும் புதிய மக்கள் அரசாங்கம் பாதுகாப்பு, சமய சுதந்திரம் மற்றும் எல்லைப்பிரச்சினை போன்ற விடயங்களுக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவம் பற்றியும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என புதுடில்லியில் இராணுவ அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் அந்தோனி குறிப்பிட்டார். (ச-5)

வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
திருமலை.எஸ்.கணேசலிங்கம் அவர்களின்
தரம்: 5 வெற்றித்தேர்வு - 17
2008 தரம் :5வெற்றித்தேர்வு25ல் இன்னும் 8தேர்வுகள்
புத்தகசாலைகளில் பதிவு செய்து தொடராகப் பெறுங்கள்.
தரம் :4, 5 மாவட்ட வெற்றித்தேர்வுப் பரீட்சை.
ஒவ்வொரு ஞாயிறும் 6am, 8am, 10am, 2pm, 4pm
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
மேலதிக விபரங்களுக்கு. 0212229016.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.